



# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 420



## ஜனாதிபதி தேர்தலை இலக்குவைத்து நகரும் இன்றைய அரசியலில் தொடரும் இரகசியப் பேச்சுக்கள்




## இஸ்ரேலியர்களுக்கும், பாலஸ்தீனர்களுக்கும் புனித நகரமாக திகழும் ஜெருசலேம்



## மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம்

# தேர்தலை குறிவைத்து கட்சிகள் வகுக்கும் வியூகங்கள்



அடுத்த வருடம் ஒக்டோபர், நவம்பருக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு வசதியாக அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டுவரும் நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்ததாக சில மாதங்களுக்கு முன்னர் பேசப்பட்டது. தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதை கடுமையாக எதிர்க்கும் எதிரணி அரசியல் கட்சிகளும் அத்தகைய திருத்தத்தை ஆதரிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. முதலில் அடுத்த வருட முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக பெரும்பாலும் ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல்வாதிகளே பேசினார்கள். இப்போது அடுத்த வருட நடுப்பகுதியில் அந்த தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக செய்திகள் வெளியாகின்றன. தேசிய தேர்தல்களை குறிவைத்து அரசியல் கட்சிகள் புதிய அணி சேருகைகளுக்கு முன்னெடுக்கும் முயற்சிகள் ஒரு பக்கமும், மறுபக்கத்தில் கூட்டணிகளை அமைக்கும் கட்சிகளின் முயற்சிகளில் ஒரு தடுமாற்றத்தை இப்போது அவதானிக்க முடிகிறது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் முதலில் பேச்சுவார்த்தைகளை நடத்திய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் - டலஸ் அழகப்பெரும அணி (சுதந்திர மக்கள் சபை) பிறகு விமல் வீரவன்ச தலைமையிலான உத்தர லங்கா சபாகாயவுடனும் ஜனதா விமுக்தி பெரமுனவுடனும் (ஜே.வி.பி) பொது நிலைப்பாடுகளுக்கு வரக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய தனித்தனியாக பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறது.

இது ஐக்கிய மக்கள் சக்தியுடனான கூட்டணிப் பேச்சுவார்த்தைகளை சுதந்திர மக்கள் சபை நம்பிக்கையுடன் முன்னெடுக்கக்கூடிய சாத்தியம் குறித்து சந்தேகத்தை கிளப்புகிறது. தேசிய மக்கள் சக்தி முக்கியமான பிரச்சினைகளில் அரசாங்கத்துக்கு எதிராக மற்றைய எதிரணிக் கட்சிகளுடன் ஒத்துழைத்து செயற்பட முன்வரக்கூடுமே தவிர கூட்டணியொன்றை அமைக்க முன்வரப்போவதில்லை என்பது நிச்சயம். மக்கள் மத்தியில் தங்களுக்கு இருக்கும் ஆதரவு குறித்து கடும் நம்பிக்கையுடன் இருக்கும் ஜே.வி.பி தலைவர்கள் ஆட்சிப்பொறுப்பை தங்களிடம் தருமாறு மக்களிடம் கேட்டுவருகிறார்கள்.

விமல் வீரவன்ச அணியை உள்ளடக்கிய கூட்டணி ஒன்றுக்கு பிரேமதாச இணங்குவாரேயானால், அவருடன் தற்போது இருக்கும் தமிழ், முஸ்லிம் பங்காளிக் கட்சிகளை அவர் இழக்கவேண்டிய நிலை தோன்றும் என்பதில் சந்தேகமில்லை. அதே வேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானோரை ஐக்கிய தேசிய கட்சியுடனான உத்தேச கூட்டணிக்கு இழுக்கும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சாவின் முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து கடந்த வாரம் பெரிதாக தகவல் எதுவும் இல்லை.

ஜனாதிபதி தேர்தல் குறித்து திட்டவட்டமான அறிவிப்பு எதுவும் வெளியாகாத நிலையிலும் கூட கட்சிகள் அவற்றின் ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயர்களை அறிவிக்கத் தொடங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அதன் தலைவர் அநுர குமார திசாநாயக்க அறிவிக்கப்பட்டிருக்கிறார் கடந்த வாரம் கூடிய தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுச் சபை தன்னை வேட்பாளராக அங்கீகரித்ததாக திசாநாயக்கவே தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டபோது கூறினார். ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிடப்போவது முதல் தடவை அல்ல. 2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலிலும், பிறகு கடந்த வருடம் கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் கிளர்ச்சியை அடுத்து பதவி விலகிய பிறகு அவரின் எஞ்சிய பதவிக்காலத்துக்கு ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்குபாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தலிலும் திசாநாயக்க போட்டியிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி அதன் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவை சில மாதங்களுக்கு முன்னரேயே அறிவித்துவிட்டது. பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ஒரு ராஜபக்ஷவை தவிர வேறு எவரும் நியமிக்கப்படமாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இவ்விடயத்தில் பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களே பெரிதாக அடிபடுகின்ற போதிலும், ராஜபக்ஷ குடும்பத்தின் மூத்தவரான சமல் ராஜபக்ஷவை களமிறக்கவேண்டும் என்றும் சிலர் குரல்கொடுக்கிறார்கள். பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதில்லை என்பது தற்போது தெளிவாக தெரிகிறது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மீண்டும் களமிறங்குவது குறித்து இடைக்கிடை பேசுகிறார். ஆனால், அவர் எந்த கட்சிகளுடன் கூட்டுச் சேர்வார் என்று தெரியவில்லை. அவருடன் கூட்டுச்சேர எவராவது முன்வருவாரா என்பது ஒரு பிரச்சினை.

இலங்கை இதுவரையில் 8 ஜனாதிபதி தேர்தல்களை கண்டிருக்கிறது. அந்த தேர்தல்கள் பற்றிய அறிவிப்பு வந்த பிறகுதான் பெரும்பாலும் கட்சிகள் தனியாக வேட்பாளரை நிறுத்துவதா அல்லது கூட்டணி அமைத்து வேட்பாளரை நிறுத்துவதா என்பதை தீர்மானித்ததை கண்டோம். ஆனால், ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலை பொறுத்தவரையில் அதற்கு சுமார் ஒரு வருடம் இருக்கும் நிலையிலேயே கட்சிகள் அவற்றின் வியூகங்களை அமைக்கத் தொடங்கிவிட்டன.

இன்று எந்தவொரு கட்சியும் மக்களின் அமோக ஆதரவுடன் இல்லை. கூட்டணிகளை அமைப்பதை தவிர அவற்றுக்கு வேறு வழியில்லை. அத்துடன் எதிரணி கட்சிகள் நம்பிக்கை உணர்வுடன் பேசுவதாகவும் இல்லை. உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைத்தது போன்று ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்ற தேர்லையும் கூட அரசாங்கம் தாமதிக்கக்கூடும் என்ற சந்தேகத்தையும் அவை கிளப்புகின்றன.

இதுவரையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் 2010, 2015 தேர்தல்களில் மாத்திரமே பதவியில் இருந்த ஜனாதிபதிக்கு எதிராக எதிரணி கட்சிகள் பொது வேட்பாளர்களை நிறுத்தின. அவை ஒரு தடவை தோல்வியையும் மறு தடவை வெற்றியையும் கண்டன. ஆனால், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் எதிரணி பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு வாய்ப்பு பெரும்பாலும் இல்லை. முன்னர் கூறியவாறு சில கட்சிகள் அவற்றின் வேட்பாளர்களை அறிவித்துவிட்ட நிலையில் அதை வாபஸ் பெறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. எதிரணியின் பொது வேட்பாளர்கள் களமிறக்கப்பட்ட முன்னைய இரு தேர்தல்களிலும் அவர்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்த மகிந்த ராஜபக்ஷ போன்று தற்போதைய ஜனாதிபதி (ஆட்சியதிகாரத்தில் இருக்கிறார் என்பதைத் தவிர) அரசியல் ரீதியில் பலம் வாய்ந்த ஒரு வேட்பாளர் அல்ல. ஐக்கிய தேசிய கட்சி மக்கள் செல்வாக்கைப் பொறுத்தவரையில், தொடர்ந்தும் மிகவும் பலவீனமான நிலையில்தான் இருக்கிறது.

ஜனாதிபதியாக வந்த பிறகு பொருளாதாரத்தை மீட்டெடுக்க விக்கிரமசிங்க முன்னெடுத்த நடவடிக்கைகள் எந்தளவுக்கு அவரது கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை மீட்டெடுத்திருக்கிறது என்பதும் தெரியவில்லை. வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் சவாலுக்கு முகங்கொடுக்க ஆட்சிப்பொறுப்பை தைரியத்துடன் ஏற்றுக்கொண்டு குறுகிய காலத்துக்குள் கணிசமானளவுக்கு பொருளாதார உறுதிப்பாட்டை நோக்கிய திசையில் வழிநடத்தும் தலைவர் என்று விக்கிரமசிங்கவை மக்கள் முன்னிறுத்த முடியும் என்ற ஒரே நம்பிக்கையில்தான் ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல்வாதிகள் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாய்ப்பு குறித்து எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. என்றாலும் கூட பரந்தளவிலான கூட்டணியொன்று அவர்களுக்கு தேவை.

பரந்த கூட்டணியை அமைப்பது குறித்து ஐக்கிய தேசிய கட்சி பேசுகின்றபோதிலும், பொதுஜன பெரமுனவில் இருந்தும்பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தும் உறுப்பினர்களை இழுத்தெடுப்பதே தற்போது ஜனாதிபதியின் பிரதான தந்திரோபாயமாக இருக்கிறது. பதவிகளை எதிர்பார்த்து போகக்கூடியவர்களை தவிர, ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி சேர்வதற்கு வேறு கட்சிகள் விரும்பி வரக்கூடிய நிலையில் அதன் செல்வாக்கு இல்லை.

சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த மக்களும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் தனக்கு ஆதரவாக இருப்பர் என்ற நம்பிக்கை விக்கிரமசிங்கவுக்கு எப்போதும் இருக்கிறது. ஆனால், அண்மைக்காலமாக இனப் பிரச்சினையுடன் தொடர்பு டைய விவகாரங்களில் கடைப் பிடித்துவரும் குழப்பகரமான அணுகு முறைகள் அந்த ஆதரவை தற்போது எந்த நிலையில் வைத்திருக்கிறது என்பது முக்கியமான கேள்வி.

இரு ஜனாதிபதி தேர்தல்களில் அடுத்தடுத்து தோல்வி கண்ட பிறகு, விக்கிரமசிங்க தொடர்ச்சியாக மூன்று ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடுவதை தவிர்த்தார். அந்தளவுக்கு அவர் மக்கள் முன் செல்வதற்கு பயந்தார். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்பது நிச்சயம். ஜனாதிபதி தேர்தலை தவிர வேறு எந்த தேர்தலையும் பற்றி அவர் பேசுவதில்லை. மக்களின் ஆணையுடன் ஒரு தடவையேனும் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வரவேண்டும் என்பது அவரது கனவாக இருக்கலாம்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட பெற முடியாமல் தேர்தல் வரைபடத்தில் இருந்து துடைத்தெறியப்பட்ட ஒரு கட்சியின் தலைவர், இன்று அவரை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு பெரிய கூட்டணிகளை அமைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை எதிரணிக் கட்சிகளுக்கு ஏற்படுத்துகின்ற அளவுக்கு 'அவரை தவிர திறமையான ஜனாதிபதி வேட்பாளர் இல்லை' என்று பேசப்படுகின்ற அளவுக்கு அரசியல் நிலவரம் தலைகீழாக மாறியிருக்கிறது. இதை விக்கிரமசிங்கவின் பலம் என்பதா, இல்லை, எதிரணியின் பலவீனம் என்பதா?

**வீரகத்தி தனபாலசிங்கம்**
(Virakesari)

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## மக்கள் மயப்படாத போராட்டமும், தமிழர்களும்

தமிழர்களின் பலமானது இருப்பைத் தக்கவைப்பதற்கான போராட்டமான ஆயுதப் போராட்டம் உலக வல்லரசுகளின் ஆதரவுடன் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்களின் தலைவிதி மீண்டும் அஹிம்சைப் போராட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது.

அஹிம்சை வழியில் போராடித்தான் அதற்கு எதுவித பயனும் இல்லையென்ற முடிவில், ஆயுதப்போராட்டம் ஆரம்பமானது. இப்பொழுது மீண்டும் அதே அஹிம்சை வழியில் யாரை வழிக்குக் கொண்டுவர தமிழர்களின் முயற்சிக்கின்றார்கள்? அதுவும் இந்த அஹிம்சை வழிப் போராட்டங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மக்கள் மயப்படாத போராட்டமாக இடம்பெறுகிறது.

காணாமல் போனோர் தொடர்பான போராட்டமானது சுமார் ஆறு வருடங்களை வெற்றிகரமாகக் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இப்போராட்டத்தில் காணாமல் போனோரைத்தேடியோர்மரணித்தது தான் மிச்சம். தற்பொழுது மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினை, தையிட்டி பௌத்த விகாரைப் பிரச்சினை இந்த இரண்டு போராட்டத்திலும் எவ்வளவு தமிழர் மக்களின் பங்களிப்பு உள்ளது என்று பார்த்தால் மிகச் சொற்பமானதே.

அது மட்டக்களப்பில் தானே நடக்கின்றது எமக்கென்ன, நமக்கிருக்கிற பிரச்சினையில இதுவேற, போராடி என்னத்தத்தான் கண்டோம் என்று கூறி அலுத்துப்போன தமிழ் மக்கள். இப்படியே தூங்கினால் இருப்பதற்கு சிறு இடம் கூட இல்லாமல் போகலாம். அதற்காக மீண்டும் ஆயுதம் தூக்கிப் போராடச் சொல்ல வில்லை. மயிலத்தமடுவில் நடக்கும் அஹிம்சைப் போராட்டத்தில் வடகிழக்கு எனப் பிரிவு இல்லாமல் வடக்கில் இருந்து மக்களைத் திரட்டி, மிகப்பெரும் அஹிம்சைப் போராட்டத்தை மேற்கொண்டு தமிழர்களின் ஒற்றுமையைக் காண்பிக்கவேண்டும். அதேபோல் தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கும் கிழக்கு மக்கள் ஒன்றுதிரண்டு அஹிம்சை வழியில் போராடினால் தீர்வு வரச் சாத்தியம் உள்ளது.

அதைவிட்டு வடகிழக்கில் ஒரு நாள் கடையடைப்பு மேற்கொள்வதும் பத்திரிகைகளுக்குப் படங் காட்டுவதும், அனல் பறக்கும் அறிக்கைகளை விடுவதும், பாராளு மன்றத்தில் கொந்தளிப்பதும் இவை எதுவும் தீர்வினைத் தரப்போவதில்லை. ஒன்றுதிரண்ட மக்கள் எழுச்சியே பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். மக்கள் மயப்படாத எந்தப் போராட்டமும் தோல்வியில் தான் முடியும். தமிழ் அரசியல்வாதிகளே! சிந்தியுங்கள். சிந்திக்கத் தவறின் வடகிழக்கில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான வரலாறு கூட இல்லாமல் போகலாம்.

# கல்லறைப் பூக்கள்



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

## 20

தனி மரமாக சிந்தனையின் சிகரமாக சாத் வீதியின் ஓரமாக நடந்து சென்றான். 'திருகோணமலைக்கு வவுனியாவிலிருந்து பேருந்து கட்டணம் *120 ரூபாய்*. ஒரு நாளைக்கு விடுதியில் தங்குவதற்கு *400 ரூபாய்*. ஒரு நாளைக்குச் ஒருவேளை சாப்பாட்டுக்கு *80 ரூபாய்*. (ஒருவேளை சாப்பாட்டை மட்டுமே திருகோணமலையில் தங்கும் வேளையில் சாப்பிடுவதற்குத் திட்டமிட்டான்) பத்து நாள் தங்கினால், சாப்பாட்டுச் செலவு *800 ரூபாய்*. கப்பல் டிக்கட்டுக்கு மட்டும் *1700 ரூபாய்*. போட்டோக் கொப்பி செலவு மொத்தமாக *400 ரூபாய்*. ஆக மொத்தம் *3420 ரூபாய்*. தன்னிடம் இருப்பது *3000 ரூபாய்* மட்டுமே. பயத்தைத் தொடர கடுமையாக சிந்தித்தான்.

தனக்குத் தமிழ்க் கற்பித்த ஆசிரியர் பண்டிதை செல்வி யோ. சோமசுந்தரம் அவர்கள் பல்கலைக் கழகச் செலவுக்காக என்றோ கொடுத்த பணம் அவனது மணிப் பையின் அடியில் வைத்திருப்பது ஞாபகத்திற்கு வந்து சென்றது. யாழ்ப்பாணத்தை எண்ணி அந்த ஞாபகத்தை அடியோடு மறந்தான். வீட்டிலிருந்து பயணிக்கும் போது தங்கை, அவனது கழுத்தில் போட்டு விட்ட, தாயின் ஒரு பவுண் தங்கச் சங்கிலியை வலக்கையினால், தடவிப் பார்க்கின்றான். தாயினது ஞாபகம் அதைக் கழற்றுவதற்குத் தடையாக இருந்தபோதும். தாயிடம் மானசீகமாக அனுமதி பெற்றுக்கொண்டான்.

சி.டி.பி. பேருந்து நிலையத்தை அண்மித்துவிட்டான். பக்கத்தே கூப்பிடுத் தூரத்தில் இலங்கை வங்கி தெரிகின்றது. (BOC) பேருந்து புறப்படுவதற்கு இன்னும் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் உண்டு. அவனது பாதங்கள் வங்கியை நோக்கி நகர்ந்தன. கரங்கள் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழட்டின.
"லைன்ல வாங்கோ" - வங்கி வாயிற் காவலன்.

"எத்தனை மணிக்குத் துறக்கும். இவ்வளவு ஆக்கள் நிக்கினம்."
"இப்ப பத்து நிமிஷத்தில் துறக்கும்."
"அடவு வைக்கணும்"
"வைக்கலாம்."
"இவ்வளவு ஆக்களும் போக லேட்டாகும் போல"
"அவங்கள் பென்ஷனுக்கு வந்தவர்கள் நீங்கள்தான் அடகு வைக்க வந்த முதல் ஆள்"
'அப்பாடா' - சற்று மன நிம்மதியடைந்தான். வரிசையில் நின்றவாறு பயணப் பையைத் திறந்து, முன்னம் பின்னம் தெரியாத இடத்தில் ஒரு வழிப்போக்கன் வழிகாட்டலுடன், தங்குமிடத்திற்காக வாங்கிய கடிதத்தை எடுத்து வாசிக்கின்றான். கடிதத்தின் மேல் பக்கத்தில் கண்களுக்கு இதமாக காட்சியளிக்கும் வீணை இவனுக்கு ஏதோ சொல்ல எத்தனிக்கின்றது. இருந்தும் வீணையின் தந்திகளை வாசிக்க யாரும் முன்வரவில்லை. இவனைப் போல பல்கலைக்கழக மாணவர்கள் பலர் அந்த இடத்தில் கடிதம் பெற்ற ஞாபகம் படர அவனுக்குக் கடிதத்தைப் பற்றிய சந்தோசங்கள் அவ்வளவாக எழவில்லை.

நிலைய பொறுப்பதிகாரி,
தோழர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

தங்கும் இடம் தொடர்பான விடயம்
இந்த கடிதத்தைக் கொண்டு வரும் கனகர். சாத் என்பவர் எமது கட்சியைச் சேர்ந்தவர். மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகின்றார். அங்கு, எங்களுடைய அலுவலகத்தில் தங்கும் அவருக்குத் தங்கும் இட வசதிகளைச் செய்துகொடுக்கவும்.
இங்ஙனம்,
ராஜன்,
(தோழமையுடன்)
'இவர்கள் ஏன் என்னை அவர்களின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று எழுதினார்கள்? இப்படித்தான் தங்க ளுடைய அமைப்புகளுக்கு அப்பாவி இளைஞர்களையும் யுவதிகளையும் உள்வாங்குகின்றார்களோ?.

தமிழ் அமைப்புக்கள் தங்களைத் தங்கள் சுட்டுக்கொண்டு சாவதற்கு இப்படியான செயல்கள்தானோ காரணங்களோ, எனக்குத் தெரிய பெரியோர்கள் சொல்ல கேள்விப் பட்டேன், வடக்குக் கிழக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் மாற்றுடை இல்லாமல் இருபத்து நான்கு மணித்தியாலயத்தில் வெளியேற்றப்பட்டார்கள் என்று?. தமிழர்கள் தமிழர்களால்தான் அதிகம் மாண்டுள்ளார்களா, ஆங்கிலேயர் காலத்தில், வன்னிப் பகுதியில் குடியேரிய மக்களையும் வெளியேற்றுவதற்குச் தமிழ்த் தலைவர்கள் திட்டம் தீட்டினார்கள். பின்னர் அவர்களை போராட்டத்தில் பயன்படுத்தும் நோக்கில் முன் கள போராளிகளாக பலியாக்கப்பட்டார்கள் என்றெல்லாம் என்னுடைய தாத்தா சொல்ல கேள்விப்பட்டிருக்கன்?.' - வினாக்களும் சந்தேகங்களும் உள்ளத்தில் மின்னல் வெட்டு வேகத்தில் தோன்றி மறைந்தன.

'சரி எப்படியோ தனக்குத் தங்குவதற்கு இடம்கிடைத்தால், போதும் வேறு எனக்கு என்ன தொடர்பு?' - தனக்குள் சிந்தித்தவாறு, அடகுப்பணம் ஐந்தாயிரம் ரூபாயையும் அடகுத் துண்டையும் தங்குமிடம் கடிதத்தையும் ஒன்றாக மடித்து தனது பயணப் பையின் ஒரு மூலையின் 'சிப்பை'த் திறந்து உள்ளே வைத்துக்கொண்டு, பேருந்து நிலையம் நோக்கிப் புறப்பட்டான்.

பூக் கூடைக்குள் ஒரு வண்டு புகுந்து, வண்ணாத்துப் பூச்சியைத் தேடி பூக்களின் இதழ்களைச் சிதைப்பதைப் போல, கடிதம் என்னும் வண்டு சாத்தின் வாழ்க்கை என்னும் பூக் கூடைக்குள் புகுந்துவிட்டது. என்பதை அவன் அறியத்தவறிவிட்டான். இருந்தும் இந்த சவால்களை எதிர்கொண்டு பூக் கூடைக்குள் உள்ள வண்ணத்துப் பூச்சி சுதந்திரமாக பறக்குமா? பருந்துக்கு பயந்து கூடைக்குள் புகுந்த வண்டுக்கு இரையாகுமா, வண்டும் வண்ணத்துப்பூச்சியும் பருந்துக்கு இரையாகுமா? கதையில் பொறுத்திருந்து பார்ப்போம்.

"மூன்று அப்பிள் நூறு ரூபாய் ஓடி வாங்கோ" - அப்பிள் வியாபாரி கைளில் அப்பிள் பொதிகளுடன் கூவிக் கூவி பேருந்து நிலையத்தின் ஒரு மருங்கில் நிற்கின்றான்.

"திருகோணமலைக்குப் போறவங்கோ ஓடி வாங்கோ, 'சீட்' இருக்கு ஓடிவாங்கோ. வெளிக்கிடப் போகுது. அடுத்த 'பஸ்' ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகுதான், வரும்." - பேருந்து நடத்துநரின் சப்தம் பேருந்துகளின் 'உறுமல்' ஒலிக்கு மேலாக செவிப்பறைகளைக் கிழித்தது.



"அக்கா வங்கோ, அண்ணா வாங்கோ, அம்மா வாங்கோ, ஐயா வாங்கோ, தேத்தண்ணி குடிச்சிட்டு, வடை சாப்பிட்டுட்டுப் போகலாம். வாங்கோ... வாங்கோ... சாயா... சாயா... எண்ட.. எண்ட... அத்துலட்ட எண்ட..." - தேநீர்க் கடைக்காரன் வாசலில் நின்றவாறு, கைகளை அசைத்து வரவேற்பு கீதம் இசைத்தான்.

நூறு ரூபாய்க்கு ஒரு அப்பிள் பையை வாங்கிக்கொண்ட சாத், அதனைத் தனது பயணப் பையுக்குள் வைத்தான். பேருந்தின் பின்வாசல் வழியாக ஏறி உள்ளே சென்றான். பேருந்தின் பலகணி ஓரத்து ஆசனங்கள் எல்லாம் நிரப்பப்பட்டிருந்தன. அவனுக்காகக் காத்திருப்பது போல இரண்டு ஆசனங்களைக் கொண்ட ஒரு பக்கம் ஆசனம் வெறுமையாக இருந்தது. சாளரத்தின் ஓர் ஆசனத்தில் பெரிய உருவமாக கருத்த குண்டு மனிதன் ஒருவனும் முன் சாளரத்தின் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்த கம்பி மீசையைக் கொண்ட மெல்லிய ஒருவனும் சிரித்துக் கதைத்துகொண்டிருக்கிறார்கள்.

"எக்ஸ்கூஸ் மீ. இந்த சீட்டில் ஆள் இருக்கா?" - சாத்தின் வார்த்தைகள் நறுங்கனிகளின் சுவையைப் போல கருத்த குண்டனின் செவிகளில் ஒலித்தன. "இல்லை"
"இருக்கலாமா?"
"இல்லாட்டி இருக்க வேண்டியது தானே என்ன கேள்வி?."
"கேக்கிறது நல்லந்தானே"
"நல்லந்தான் தம்பி பெஷமா இருங்க"
சாத்துக்கு, ஆண்கள் பேருந்தின் யன்னல் ஓரத்து ஆசனத்தில் அமர்வது காற்று வாங்க என்பது மற்றுமே தெரியும். அநேக ஆண்கள் தனித் தனியே ஓர் ஆசனத்தை விட்டு, இன்னும் ஓர் ஆசனத்தில் அமர்வது, தனக்கு அருகில் யாராவது ஒரு பெண் வந்து அமர மாட்டாளா? என்ற ஏக்க உணர்வுவைக் தன்னுள்ளே கொண்டிருப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவ்வாறு தெரிந்திருப்பதற்கு அவன் அவ்வளவாக பொதுப் போக்குவரத்துகளில் ஈடுபடவில்லை.

ஆண்கள் அருகில், பெண்கள் வந்து அமரும் போது, அறிமுகம் இல்லாத அவளுடன் மலரில் தேனைக் கண்ட வண்டைப் போல சுற்றி சுற்றி பழகி, அவளுக்கு பணிவிடைகள் செய்வது இயல்பு. இவ்வாறான பல சம்பவங்களில் சில சம்பவங்களில் தேனை கரும்பின் சாறைக் குடிப்பதைப் போல, சில வண்டுக்கள் குடித்துள்ளன. சில பூக்கள் கருகியுள்ளன். சில பூக்கள் வாடாது, வண்டுக்களைத் தேனீக்களாக மாற்றி சந்தோசமாக தினமும் வாழ்க்கையில் பூக்கின்றன. சில பூக்கள் அதே பேருந்தில் இன்னுமொரு பூவை மேனிக்குள்ளும் மேனிக்கு வெளியிலும் சுமந்தவாறு ஆசனங்களில் மல்லிகைப் பூக்களை வேறு வேறு இன வண்டுகள் தேனுக்காக மட்டும் சுற்றி வட்டமிடுவதைக் கண்டும் காணாத மாதிரி பயணிக்கின்றன.

தொடரும்...

# மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம் : வாழ்வாதாரத்தினை இழந்து தவிக்கும் மக்கள் - தீர்வு எப்போது?



ஒருவருடைய காணிகளை வலோத்காரமாக இன்னும் ஒருவர் ஆக்கிரமிக்கிற செயல்கள் தனிநபர் தொடங்கி நாடளாவிய ரீதியில் அங்கும் இங்குமாக இடம் பெற்றுக்கொண்டு வருகிறது. வடக்கில் விடுவிக்கப்படாத கேப்பாப்புலவு தொடங்கி, காங்கேசன்துறை வரை ஆங்காங்கே பொட்டல் பொட்டலாக அபகரிக்கப்பட்டிருக்கிற பல்வேறு நிலங்களை இதற்கு உதாரணமாக காட்டலாம். இந்த வரிசையில் அதிக கவனத்தோடு கையாளப்படவேண்டிய நிலமாக மாறியிருக்கிறது மட்டக்களப்பின் மயிலத்தமடு, மாதவனைப் பகுதியின் மேய்ச்சல்தரை விவகாரம்.

மட்டக்களப்பு பிரதேசத்தின் பொருளாதார வளத்தைத் தீர்மானிப்பதில் இங்குள்ள விவசாய நிலங்களும், கடல் வளமும், கால்நடை வளமும் முன்னிலை வகிக்கிறது. இதன் அடிப்படையில் மயிலத்தமடு மாதவனை பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 200000 அதிகமான கால்நடைகள் நாளொன்றிக்கு சுமார் 10000 லீற்றர் பாலை வழங்கக்கூடிய இயலளவில் இருந்து வருகின்றன. இக் கால்நடைகளுக்கு ஏற்ற புல்லினங்களும், பொட்டல் காடுகளும், சமதரையும், நீர்தேங்கு பிரதேசங்களையும் கொண்டதாக குறித்த மேய்ச்சல் தரை காணப்படுகிறது.

மாவட்டத்தில் சிறுபோகம் மற்றும் பெரும்போக பயிற்செய்கை ஆரம்பிக்கின்ற காலத்தில் கால்நடைகளை திறந்த வெளியில் உலவவிட முடியாத நிலை காணப்படும், மீறி உலவவிடுகிற சந்தர்ப்பங்களில் பயிர் அழிவுகளை பயிர்ச் செய்கையாளர்கள் சந்திக்க நேரிடும். எனவே ஏனைய காலங்களைவிட நெற்பயிர்ச்செய்கை காலத்தில் மயிலத்தமடு மாதவனைப் பிரதேசத்தின் மேய்ச்சல்தரையின் தேவை அதிகமாக உணரப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள மயிலத்தமடு மாதவனையின் மேய்ச்சல் நிலமானது 1972 ம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்பிருந்தே மட்டக்களப்பில் வாழுகிற கால்நடை பண்ணையாளர்களால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அங்குள்ள மூத்த பண்ணையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

ஆனால் குறித்த மேய்ச்சல் தரையானது 2010 இல் சிங்கள மக்களால் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறது. தெய்யத்தை கண்டி, செவனப்பிட்டி, மன்னம்பிட்டி, வெலிகந்தை போன்ற பிரதேசங்களில் இருந்து வந்து இம் மேய்ச்சல் நிலத்தில் குடியேறிய சிங்கள மக்கள் வீடுகளை அமைத்து, காடுகளை அழித்து, புற்தரைகளை சேதமாக்கி சோளன் உட்பட்ட சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள்.

குறித்த மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிற கால்நடைகள் விரட்டப்பட்டும், சேதப்படுத்தப்பட்டும், சுடப்பட்டும், களவாடப்பட்டும், பண்ணை யாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டும், பண்ணையாளர்களின் வாடிகள் எரியூட்டப்பட்டும் நிலமை முரண்பாடுகளுக்கு உரியதாக மாறியிருக்கிறது. இதனால் 2012ம் ஆண்டில் குறித்த சட்டவிரோத குடியேறிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் வெளியேற்ற உத்தரவுகளை கருத்தில் கொள்ளாத நில ஆக்கிரமிப்பாளர்கள் குறித்த மேய்ச்சல் நிலத்தில் 2020இல் மீளவும் குடியேறியிருக்கிறார்கள், இதனால் மயிலத்தமடு மாதவனைப் பகுதியின் கால்நடைப் பண்ணையாளர்கள் தொடர்ச்சியான சவால்களுக்கு முகம் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இதுகுறித்து 2021ம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு குறித்த நிலப்பகுதியானது மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட பகுதிதான் என்பது சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டு மயிலத்தமடுவில் அத்துமீறி குடியேறி பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான உத்தரவு 2022.07.06 ம் திகதி உயர்நீதிமன்றத்தினால் துரித மகாவலி அபிவிருத்தி சபைக்கு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கைகள் எழுத்தளவிலேயே இருந்து வருகிறது.

இம் மேய்ச்சல் நிலப் பகுதியானது 1930ம் ஆண்டு காலப்பகுதியில் வனவளத் திணைக்களத்திற்கு உரியதான சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டது. பின்னர் 1978ம் ஆண்டின் பின்பு துரித மகாவலி அதிகார சபைக்குள் உள்வாங்கிய சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளது. மகாவலி அபிவிருத்தி திட்ட வரைபடத்தின் "வீ" வலயத்தில் மேய்ச்சல்தரை என்பது குறிப்பிடப்பட்டிருப்பதும், உச்சநீதிமன்ற வழக்கு விசாரணையின்போது துரித மகாவலி அபிவிருத்திச் சபை இதனை உறுதிப்படுத்தி இருப்பதும் இப் பகுதியானது மேய்ச்சல் தரைதான் என்பதை உறுதிப் படுத்துவதற்கான முக்கிய ஆதாரமாக கொள்ள முடியும். இருந்தபோதிலும் 2022 ம் ஆண்டின் உச்ச நீதிமன்ற வெளியேற்ற கட்டளையை கருத்தில் எடுக்காமல் இன்றுவரை மயிலத்தமடு மாதவனை பகுதியில் சட்டவிரோதமான முறையில் சிங்கள மக்கள் குடியேறியிருப்பது மட்டுமன்றி உயிர் அச்சுறுத்தல் மிக்க முரண்பாடான செயல்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதற்கு கடந்த காலத்தின் பல சம்பவங்கள் சாட்சியாகி நிற்கிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினுடைய ஆட்சிக் காலத்திலேயே இப் பண்ணையாளர்களுக்கும் கால்நடை களுக்கும் அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸ், வனவள திணைக்களம், மகாவலி அதிகாரசபை என்று குறித்த திணைக்களங்கள் பலவற்றிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

2010ம் ஆண்டிலிருந்து 2023ம் ஆண்டு வரையான 13 வருட காலப்பகுதியில் சுமார் 3000 கால்நடைகள் சுட்டுக் கொல்லப்பட்டும், ஏனையவை களவாடப்பட்டும் மொத்தமாக 4000ற்கு மேற்பட்ட கால்நடைகளை இழந்திருக்கிறார்கள் பண்ணையாளர்கள். தவிர அங்கு சென்றுவருகிற கால்நடை உரிமையாளர்கள் உயிர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவத்தை உதாரணமாக குறிப்பிடலாம். மயிலத்தமடு மாதவனை பகுதியில் கால்நடை பண்ணையாளர்கள் எதிர்கொள்ளுகிற சவால்களைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் உரிய முறையில் அப்பகுதிக்கு பயணப்பட்ட இந்து மற்றும் கிறிஸ்தவ சமய குருமார்கள் உட்பட்ட பிரதிநிதிகள் பயணப்பட்ட வாகனத்தை இடைமறித்த பௌத்த மதகுரு மற்றும் நில அபகரிப்பாளர்களால் மிக மோசமான முறையில் பிரதிநிதிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் இப் பிரதேசத்தின் நிலமைகளுக்கான சாட்சியமாகிறது.

இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மேய்ச்சல் நிலங்களை மீளப் பெற்றுத் தருமாறு கோரி மயிலத்தமடு மாதவனை கால்நடைப் பண்ணையாளர்கள் ஒன்றிணைந்து அறப்போரட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் ஆலயத்திற்கு அருகில் வீதியோரம் உண்பதற்கான உணவுப் பாத்திரங்களை ஏந்தியபடி வாழ்வாதாரத்தை சிதைக்க வேண்டாம் என்கிற அடிப்படையில் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிற அறப்போராட்டம் நாற்பத்து ஒரு நாட்களைக் கடந்தும் நடைபெற்று வருகிறது. குறித்த அறப்போரட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் மூன்று கிழமைகள் கடந்த நிலையில் வேறொரு தேவையின் நிமிர்த்தமாக மட்டக்களப்பிற்கு விஜயம்செய்தஜனாதிபதியை சந்தித்தகால்நடை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டினை ஜனாதிபதிக்கு எடுத்துரைத்திருந்தனர். உரிய தீர்வினை பெற்றுத்தருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதியின் வாக்கிற்கு அமைய மாவட்டத்தின் அரச கட்சிப் பிரதிநிதிகள், ஏனைய மக்கள் பிரதிநிதிகள், துரித மகாவலி அதிகார சபையின் அதிகாரிகள், கால்நடை பண்ணை உரிமையாளர்களுக்கிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று சுமூகமான தீர்வினை பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதியால் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இன்றுவரை இதற்கான தீர்வு வழங்கப்படவில்லை. பேச்சுவார்த்தையின் பின்பு முன்னரிலும் வேகமாக மேய்ச்சல் நிலங்கள் உழப்பட்டு சிதைக்கப்படுவதாக கால்நடை பண்ணையாளர்கள் கவலை வெளியிடுகிறார்கள்.

மாதவனை பகுதியின் மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஏதுவாக முன்னைய அரசாங்க அதிபர் சார்ள்ஸ் அவர்களுடைய காலத்தில் குளம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு ஆவண செய்யப்பட்டுள்ளதுடன், மேய்ச்சல் தரையினதும் கால்நடைகளை நம்பியுள்ள சுமார் மூவாயிரம் பண்ணை யாளர்களினதும் வாழ்வாதாரமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பின் வந்த அரச அதிபர்களுடைய செயற்பாடுகள் இம் மேய்ச்சல் தரை தொடர்பில் ஆரோக்கியமானதாக இல்லை என்று தெரிவிக்கின்றார்கள் கால்நடை பண்ணை உரிமையாளர்கள்.



மாதவனைப் பகுதியில் சட்டத்திற்கு புறம்பாக குடியேறியுள்ள மக்களின் அறமற்ற செயற்பாடுகளுக்கு பௌத்த மத துறவிகளும் அரச அதிகாரிகளும் துணைபோவது வேதனை. குறிப்பாக அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யஹகம்பத், மற்றும் துரித மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் குறித்த சட்டவிரோத செயற்பாடுகளின் பின் நிற்பதாக விசனம் தெரிவிக்கிறார்கள் பிரதேச மக்கள். மாதவனைப் பகுதிக்கு அருகில் அம்பாறை மாவட்டத்தில் இருக்கிற திவில்தெனிய என்கிற கிராமத்தின் பெயரை மாதவனை மேய்ச்சல் தரை பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத குடியேற்றத்திற்கு இட்டுள்ளதுடன் பெயர் மாற்ற முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேய்ச்சல் தரை பிரதேசத்தில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு முயற்சிப்பதுடன் புதிய புத்தர் சிலை ஒன்றையும் கடந்த 15 ம் திகதி பிரதிட்டை செய்திருந்தார்கள், குறித்த நிகழ்வில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யஹகம்பத் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். எனினும் குறித்த பிரதேசத்தின் அமைதியை பேணுவதன் பொருட்டு பிரதிட்டை செய்யப்பட்ட புத்தர் சிலை அதிகாரிகளால் பெயர்த்து எடுக்கப்பட்டுள்ளது. புத்தர் சிலையை பெயர்த்து எடுத்தமையானது மனித உரிமை மீறல் என்று குற்றம் சாட்டியுள்ள அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் சாமானிய தமிழ் மக்களில் யாராவது மீளக் குடியமரும் நோக்கில் யுத்த காலத்தில் கைவிடப்பட்ட நிலங்களை தேடிச் சென்று அங்குள்ள மரங்களை வெட்டி குடியமரும் முயற்சியில் ஈடுபட்டால் விரைந்து கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு முன்நிற்கிற பொலிஸ் உட்பட்ட அரச திணைக்களங்கள் மாதவனைப் பகுதியில் சட்டவிரோத சிங்கள குடியேறிகளின் சட்டத்தை மீறிய செயற்பாடுகளுக்கு மௌனம் காப்பதன் காரணம் தான் என்ன?

ஒரு நாளைக்கு சுமார் 5500 லீற்றர்கள் பாலை வழங்கிய கால்நடைகளின் இயல் திறன் குறைந்து சுமார் 300 லீற்றர்களாக மாறியுள்ள நிலையில், இப் பெரும்போக காலத்தில் கால்நடைகளை கொண்டு செல்வதற்கும் பராமரிப்பதற்கும் இடமற்று, வாழ்வாதாரமே கேள்விக்குறியான நிலையில் வீதிகளில் அறப்போராட்டத்தில் இறங்கியுள்ள சாமானிய மக்களின் வாழ்வியற் கேள்விகளுக்கு பிரதேசத்தின் மாவட்ட செயலகம், துரித மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம் உட்பட்ட அரச நிறுவனங்களும், அரசின் பக்கம் நிற்கிற மக்கள் பிரதிநிதிகளும் என்ன பதிலை வழங்கப் போகிறார்கள்?

காணிகளற்ற நிலையில் இருக்கிற சிங்கள மக்களுக்கு பொலநறுவையிலோ அல்லது அம்பாறையிலோ பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாத நிலங்களை வழங்கி உண்மை நிலமைகளை எடுத்துரைப்பதை விடுத்து இன முரண்பாடுகளை தோற்றுவிக்கக்கூடிய வகையிலான நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றுகிற அரசியல் பலத்தையும், அதிகாரிகளையும், மத குருக்களையும் என்னவென்று சொல்வது?

திணைக்களங்களுக்கு அப்பாற் பட்டு நாட்டின் ஜனாதிபதி குறித்த விடயத்தில் சிரத்தை எடுத்து உரிய தீர்வினை வழங்காவிட்டால் கால் நடைப் பண்ணையாளர்கள் மட்டுமன்றி மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயிகளும், பாதிப்புக்களைச் சந்திக்கப் போகிறார்கள் என்பதே நிதர்சனம். அபிவிருத்தியும், அமைதியும் ஒவ்வொரு தனிமனிதனிலும் அவனது செயற்பாடுகளிலும் இருந்துதான் கட்டியெழுப்பப்படும் என்பதை அரசியல் மற்றும் சமூக பின்புலத்தோடு செயற்படுகிற இனவாதிகள் என்றைக்குப் புரிந்து கொள்ளப்போகிறார்கள்? அல்லது எப்படி புரிய வைக்கப்போகிறார்கள்?

**சர்மிலா வினோதினி**

# இஸ்ரேலியர்களுக்கும், பாலத்தீனர்களுக்கும் புனித நகராக திகழும் ஜெரூசலேம் - உலகின் சர்ச்சை மிகுந்த பிராந்தியமாக இருப்பது ஏன்?



இன்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருக்கும் பெயர் ஜெரூசலேம். மூன்று மதங்களின் புனிதத் தலமாக விளங்கும் இந்த நகரம், மிக மோசமான மோதல்களை சந்தித்திருப்பது மட்டுமன்றி, உலகின் மிகுந்த சர்ச்சைக்குரிய பிராந்தியமாக பார்க்கப்படுவது ஏன் என்று நோக்கும்போது, பல சுவாரஸ்யமான தகவல்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. உலகின் புராதன நகரங்களில் ஒன்றான ஜெரூசலேம், இஸ்லாம், கிறித்துவம் மற்றும் யூத மதத்தினரின் புனித தலமாக கருதப்படுகிறது. ஜெரூசலேத்தில் தனது புதிய தூதரகத்தை அமெரிக்கா திறந்துள்ளது. தூதரக திறப்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பங்கேற்கவில்லை என்றாலும், அவரது மகள் இவாங்கா டிரம்ப், தனது கணவர் ஜாரெட் குஷ்னெர் மற்றும் மூத்த அமெரிக்க அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இஸ்ரேல் நாடு உருவாகிய 70ஆம் ஆண்டு நிறைவு நாளன்று புதிய தூதரகத்தைத் திறக்கும் விதமாக அமெரிக்கா தூதரக திறப்பு விழா திகதியை அமைத்திருந்தமை உங்களுக்கு நினைவிருக்கும்.

இந்த நிலையில், ஜெருசலேம் ஏன் உலகிலேயே சர்ச்சை மிகுந்த பகுதியாகப் பார்க்கப்படுகிறது என்று விரிவாகப் பார்க்கலாம். ஒன்றுபட்ட ஜெருசலேம் தனது தலைநகர் என்று இஸ்ரேல் கூறுகிறது. அரபு-இஸ்ரேல் போரில் 1967இல் கிழக்கு ஜெரூசலேமை தனது கட்டுப்பாட்டிற்கு இஸ்ரேல் கொண்டு வந்தது. எதிர்காலத்தில் உருவாக்கப்படும் தன்னுரிமைகொண்ட பாலத்தீன நாட்டின் தலைநகராக ஜெரூசலேம் இருக்கும் என்பது பாலத்தீனர்களின் வாதம். இஸ்ரேலியர்களுக்கும், பாலத்தீனர்களுக்கும் புனித நகராக திகழும் ஜெரூசலேம் நகர் மட்டும் மிகவும் புராதனமானது அல்ல அதைப் பற்றிய சர்ச்சைகளும் பழமையானவையே. இஸ்லாம், கிறித்துவம், யூதம் ஆகிய மூன்று மதங்களுக்கும் புனித தலம் ஜெரூசலேம். இதனாலேயே பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள், யூதர்கள் மற்றும் கிறித்துவர்கள் ஜெருசலேமிற்கு உரிமை கொண்டாடுகின்றனர். 5,000 ஆண்டு வரலாற்றைக்கொண்ட ஜெரூசலேம் பலமுறை தாக்குதலுக்கு உள்ளாகி, முற்றுகையிடப்பட்டுள்ளது. தரைமட்டமாக்கப்பட்டு மீண்டும் புனரமைக்கப் பட்டுள்ளது. எனவே தான் இந்த நகரின் மண்ணில் சரித்திரத்தின் சுவடுகள் பொதிந் துள்ளதாக கருதப்படுகிறது. உலகின் பழம் பெரும் நகரங்களில் ஒன்றாக ஜெரூசலேம் கருதப்படுகிறது.

### ஜெரூசலேத்தில் அமெரிக்க தூதரகம் திறப்பு விழா - நான்கு பாகங்கள் எவை?

பல்வேறு மதங்களின் மக்களிடையே ஏற்பட்டுள்ள பிளவு மற்றும் மோதல் காரணமாக இன்று ஜெரூசலேம் உலக மக்களின் கவனத்தை பெற்றிருக்கலாம். ஆனால் இந்த நகரத்தின் வரலாறோ மக்களை ஒன்றிணைப்பது. நகரின் மையப் பகுதியில் பழைய ஜெரூசலேம் என்று அழைக்கப்படும் புராதன நகரம் அமைந்திருக்கிறது. இது, உலகப் பாரம்பரியச் சொத்தாக (World Heritage) வகைப்படுத்தப்பட்டுள்ளது. அர்மீனியக் குடியிருப்பு, கிறித்தவக் குடியிருப்பு, யூத குடியிருப்பு, முஸ்லிம் குடியிருப்பு என நான்கு குடியிருப்புகளை உள்ளடக்கியது பழைய ஜெரூசலேம். உலகின் மிக புனிதமாக கருதப்படும் இந்த நகரின் நான்கு குடியிருப்புகளும் கோட்டை போன்ற பாதுகாப்பு சுவரால் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு பகுதிகள் கிறித்துவர்களுக்கு சொந்தமானதாக கருதப்படுகிறது. ஏனெனில் அர்மீனியர்களும் கிறித்துவர்களே. நான்கு பகுதிகளிலும் மிகவும் பழமையானது அர்மீனியக் குடியிருப்பு பகுதிதான். மேலும், உலகின் மிகப் பழமையான அர்மீனிய மையம் இங்கிருக்கும் அவர்களது குடியிருப்பு பகுதியே. செயிண்ட் ஜேம்ஸ் தேவாலயம் மற்றும் மடாலயத்தில், அர்மீனியர்கள் தங்கள் வரலாறு மற்றும் கலாசாரத்தை பாதுகாத்து வருகின்றனர்.

### முதல் தேவாலயத்தின் கதை

கிறித்துவர்களின் பகுதியில் திருக்கல்லறை தேவாலயம் (The Church of the Holy Seppelker) அமைந்துள்ளது. இது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை மையமாக கொண்டதாக நம்பப்படுவதால், உலகெங்கிலும் உள்ள கிறித்தவர்களின் நம்பிக்கைக்கு உரிய இடமாக இருக்கிறது. பைபிளின் புதிய ஏற்பாட்டின்படி, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது, இறந்தது, உயிருண்டு எழுந்தது அனைத்துமே ஜெரூசலேமில்தான். கிறித்துவ மரபுகளின்படி, இந்த இடம் கல்வாரி மலை என்று கூறப்படுகிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் செய்யப்பட்ட கல்லறை இங்குதான் இருக்கிறது. அவர் கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்ததும் இங்கிருந்துதான் என்று நம்பப்படுகிறது.

கிறித்துவ சமூகத்தினர், குறிப்பாக கிரேக்க பழமைவாத பேட்ரியார்ச்செட், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் பிரான்சிஸ்கன் ஃ பிரையர்ஸ், அர்மீனிய பேட்ரியார்ச்சார்ட் போன்ற வற்றை தவிர, எத்தியோப்பியன், காப்டிக் மற்றும் சிரியாவின் பழமைவாத தேவாலயங்கள் அதோடு தொடர்புடைய போதகர்கள் என இந்த தேவாலயம் கிறிஸ்தவ சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளால் நிர்வகிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் இருக்கும் கோடிக்கணக்கான கிறித்துவர்களின் புனித மையம் இது. ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மக்கள் கிறிஸ்துவின் கல்லறைக்கு வந்து பிரார்த்தனை செய்கின்றனர். இங்கு வந்து பிரார்த்திப்பதும், பாவமன்னிப்பு பெறுவதும் கிறித்துவர்களுக்கு மனநிறைவு தருவதாக கருதப்படுகிறது.

### மசூதியின் கதை என்ன?

ஜெரூசலேமின் நான்கு குடியிருப்புகளில் மிகப்பெரிய குடியிருப்பு பகுதி இஸ்லாமியர்களுடையதுதான். பாறைக் குவிமாடம் மற்றும் அல் அக்ஸா மசூதி இங்கு அமைந்துள்ளது.ஹரம்அல்ஷரீஃப்(புனிதஇடம்) என்று அழைக்கப்படும் இடமும் ஜெரூசலேமில் அமைந்துள்ளது. இஸ்லாமியர்களின் மிகவும் புனிதமான இடங்களின் பட்டியலில் மூன்றாவது இடத்தை பெற்றிருக்கும் அல்-அக்ஸா மசூதி வக்ஃப் என்ற இஸ்லாமிய அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படுகிறது. நபிகள் நாயகம் மெக்காவில் இருந்து ஒரே இரவு பயணத்தில் இங்கு வந்ததாகவும், அவர் இங்கிருந்து தீர்க்கதரிசிகளின் ஆவிகளுடன் பேசியதாகவும் முஸ்லிம் மக்கள் நம்புகின்றனர். இதன் அருகிலேயே பாறைக் குவிமாடம் அமைந்துள்ளது. முகமது நபி ஜெரூசலேமிலிருந்து விண்ணகப் பயணம் சென்றதாக இஸ்லாமியர்கள் நம்புகின்றனர். ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் நாள்தோறும் இந்த புனித இடத்திற்கு வந்து தொழுகை நடத்துகின்றனர். ரம்ஜான் மாதத்தின் வெள்ளிக்கிழமை நாட்களில், இங்கு தொழுகை நடத்துபவர்களின் எண்ணிக்கை மிக அதிக அளவில் இருக்கும்.

### புனிதச்சுவர்

யூதர்களின் பகுதியில்தான், கோட்டை அல்லது மேற்கு சுவர் அமைந்துள்ளது. அல் அக்ஸா மசூதியின் சுற்றுமதிலின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் மேற்கு சுவர், சிதைந்துபோன நீண்ட சுவரின் எஞ்சியிருக்கும் பகுதியாகும். இந்த இடத்தில் யூதர்களின் புனித கோயில் இருந்ததாக நம்பப்படுகிறது. இந்த புனித தலத்திற்குள் பரிசுத்தமான புனிதப் பகுதி (The Holy of the Holy) அல்லது யூதர்களின் மிகவும் புனிதமான இடம் அமைந்திருந்தது. உலகமே இந்த இடத்தில் இருந்துதான் உருவானது என்றும், நபி இப்ராஹீம் தனது மகன் இஷாக்கை தியாகம் செய்யத் தயாராக இருந்த இடம் என்றும் யூதர்கள் நம்புகின்றனர். பரிசுத்தமான புனிதப் பகுதி (The Holy of the Holy) என்பதே பாறை குவிமாடம் (Dome of the Rock) என்று யூதர்கள் நம்புகின்றனர். தற்போது மேற்கு சுவரின் அருகில் உள்ள பரிசுத்தமான புனிதப் பகுதியில் (The Holy of the Holy) யூதர்கள் வழிபாடு செய்கின்றனர். தங்கள் பாரம்பரியத்துடன் தொடர்புடையதாக கருதும் யூதர்கள் இங்கு ஆண்டுதோறும் வருகின்றனர்.

### பதற்றத்துக்கு காரணம் என்ன?

ஜெரூசலேமின் நிலைமையில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் வன்முறை மோதல்கள் வெடிக்கின்றன. புராதன நகரமான ஜெரூசலேம் தொடர்பாக பாலத்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே சர்ச்சைகள் தொடர்கதையாக நீள்கின்றன. இதனால் இங்கு நடைபெறும் சிறிய அசைவும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது.



யூதர்களின் குடியிருப்பில் இருந்து கிழக்குபுறமாக எடுக்கப்பட்ட புகைப்படம்

இந்த புராதன நகரம், யூதர்கள், கிறித்துவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு மதரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதோடு, அரசாங்க ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 1948இல் இஸ்ரேல் நிறுவப்பட்டதும், அந்நாட்டு நாடாளுமன்றம் நகரின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் இஸ்ரேல் கிழக்கு ஜெரூசலேமை கைப்பற்றியது. புராதன நகரம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்குள் வந்தாலும், அதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஜெரூசலேமின் மீதான இஸ்ரேலின் முழு இறையாண்மையும் ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதால், இஸ்ரேலிய தலைவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

### ஜெரூசலேமின் மக்கள் தொகை

பாலத்தீனர்கள் கிழக்கு ஜெரூசலேமை தங்கள் தலைநகர் என்று உரிமை கோருகின்றனர். இஸ்ரேல் - பாலத்தீன சர்ச்சையில் அமைதியை ஏற்படுத்த சர்வதேச பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜெரூசலேம் இரு நாடுகளின் தீர்வு என்னும் அறியப்படுகிறது. 1967-க்கு முன்னர் இஸ்ரேல் எல்லைப் பகுதியில் சுதந்திர பாலத்தீன நாட்டை உருவாக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது, அது ஐ.நா தீர்மானத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெரூசலேம் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் பாலத்தீன வழித்தோன்றல்கள். இவர்கள் பல நூற்றாண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகின்றனர். நகரத்தின் கிழக்கில் அமைந்துள்ள யூத குடியேற்றப் பகுதி விரிவாக்கப்படுவதும் சர்ச்சைக்கு முக்கிய காரணம். இங்கு விரிவாக்கம் செய்வதும், கட்டுமானங்கள் கட்டப்படுவதும் சர்வதேச சட்டத்திற்கு விரோதமானவை. ஆனால் இஸ்ரேல் அதை மறுக்கின்றது.

ஜெரூசலேமின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலமாகவே வரக்கூடும் என்று சர்வதேச சமூகம் பல தசாப்தங்களாக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதனால் தான் இஸ்ரேலுடன் தூதரக உறவு கொண்ட நாடுகளின் தூதரகங்கள் டெல் அவிவ் நகரில் அமைக்கப்பட்டுள்ளன, ஜெரூசலேமில் துணைத் தூதரகங்கள் மட்டுமே உள்ளன. ஆனால், முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இஸ்ரேலியர்களுக்கும் பாலத்தீனர்களுக்கும் இடையில் சமா தானத்திற்கான இறுதி உடன்படிக்கையாக, அமெரிக்க தூதரகத்தை ஜெரூசலேமுக்கு மாற்றியிருப்பதாக அப்போது கூறினார். இரு நாடுகள் என்ற கருத்தை நிராகரித்த டிரம்ப், இரு தரப்பினரும் ஒத்துப்போகும் ஒரே நாட்டை விரும்புவதாக கூறினார்.

### முதலடி எடுத்த அமெரிக்கா

ஜெரூசலேத்தில் நடந்த அமெரிக்க தூதரக தொடக்க விழாவில், இஸ்ரேலுக்கான முன்னாள் அமெரிக்க தூதர் டேவிட் ப்ரீட்மன் அமெரிக்க தூதரகம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக முறைப்படி அறிவித்தார். "இன்று இஸ்ரேலில், ஜெரூசலேம் நகரில் அமெரிக்க தூதரகத்தை நாங்கள் தொடங்கி வைத்துள்ளோம். முதல் நாடாக தங்கள் தூதரகத்தை திறந்து வைத்ததன் மூலம், மீண்டும் உலகுக்கு வழிகாட்டும் விதமாக அமெரிக்கா செயல்பட்டுள்ளது" என்று டேவிட் ப்ரீட்மன் கூறியிருந்தார். ஜெரூசலேத்தில் நடந்த தொடக்க விழாவுக்கு முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் செல்லவில்லை. ஆனால், அவர் இந்நிகழ்வு தொடர்பாக பேசிய காணொளி ஒன்று தொடக்க விழாவின்போது ஒரு பெரிய திரையில் திரையிடப்பட்டிருந்தது. "சரியாக 70 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேலை உலகில் முதன் முதலில் அங்கீகரித்தது அதிபர் ஹாரி ட்ரூமேன் தலைமையிலான அமெரிக்க அரசுதான். இன்று நாம் ஜெரூசலேம் நகரில் அமெரிக்க தூதரகத்தை திறந்துள்ளோம். இது ஒரு நீண்டகால காத்திருப்பு" என்று டிரம்ப் தெரிவித்திருந்தார். **(தொடரும்...)**

**மறவன்**

# ஜனாதிபதி தேர்தலை இலக்குவைத்து நகரும் இன்றைய அரசியலில் தொடரும் இரகசிய பேச்சுக்கள்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிரான கூட்டணி குறித்து அரசியல் களத்தில் பல்வேறு இரகசியசந்திப்புகள்மற்றும்நகர்வுகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், கொழும்பு 5, மஹாகமசேகர மாவத்தையில் அமைந்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீரவின் இல்லத்தில் முக்கிய சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பில் நிமல் சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரத்ண, அநுர பிரியதர்சன யாபா, சுசில் பிரேமஜயந்த, நிமல் லன்சா, நளின் பெர்னாண்டோ, லசந்த அழகியவண்ண, பிரியங்கர ஜயரத்ன மற்றும் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

புதிய அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும், பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது பேசப்பட்ட நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது முயற்சிக்கும் அரசியல் ரீதியிலான பல தீர்மானங்கள் தோல்விகளை சந்தித்து வருவதாக இதன்போது தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன, புதிய கூட்டணிக்கான முயற்சிகளை நிறுத்துமாறு பஷில் ராஜபக்ஷ கடுமையாக முயற்சித்தும், பல தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும் வருவதாக கூறினார். இவற்றை நாம் பொருட்படுத்தக்கூடாது. எது நடந்தாலும் முன்னோக்கிச் செல்ல வேண்டியது மிகவும் அவசியமாகும். எமக்கு ஆதரவளிக்க எதிர்பாராத பலரும் தற்போது முன்வந்துள்ளமை உத்வேகமளிப்பதாக அநுர பிரியதர்சன யாபா கலந்துரையாடலை தொடரும் வகையில் குறிப்பிட்டார்.

இதனை தொடர்ந்தும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலர் புதுமையான பல விடயங்கள் குறித்து பேசுகின்றனர். ஆரம்ப நிலையை உணராத வகையிலேயே அவர்கள் கருத்து கூறுகின்றனர் என்று தெரிவிக்கையில், அதற்கு மறுமொழி அளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வீதியில் நடந்து செல்ல கூட முடியாத அளவில் அரசியல் ரீதியில் தோல்வியை சந்தித்த பின்னரும் இவ்வாறான வீராப்பு பேச்சுக்கள் இவர்களுக்கு தேவை தானா என்ற கேள்வியுடன் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகளை தனிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் செயல்பாடுகளையும் தீர்மானங்களையும் மறந்துவிட இயலாது. நாட்டில் அமைதியை ஏற்படுத்தி அரசியல்வாதிகளுக்கு சுதந்திரமாக செயல்படுவதற்கான சூழலை ஏற்படுத்திய ஜனாதிபதிக்கு, நன்றி மறந்தவர்களாக பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் செயற்படுகின்றமை வெட்கிக்கப்பட வேண்டிய விடயமாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா கூறினார்.

### மீண்டும் 'அப்பம்'

மாலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த கலந்துரையாடல் 8 மணி வரை எட்டிய நிலையில், அமைச்சர் மஹிந்த அமரவீர வந்திருந்தவர்களுக்கு இரவு போஷனத்தை ஏற்பாடு செய்திருந்தார். அனைவரும் உணவு உண்ணுவதற்கு தயாரான நிலையில், மஹிந்த அமரவீரவின் வீட்டில் 'அப்பம்' இல்லாமல் இருக்காது. உண்ணுவதற்கும் அச்சமாகவே உள்ளது என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த புன்னகையுடன் அரசியல் சாடைமொழியில் பேசினார்.

இவ்வாறு நடப்பு அரசியல் குறித்து பல தகவல்களை பரிமாறிக்கொண்டு இராப்போஷனத்தில் கலந்துகொண்டிருந்த அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் புதிய அரசியல் கூட்டணியின் பிரசார நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து கலந்துரையாட தொடங்கினர். புதிய அரசியல் கூட்டணி குறித்து பெயர் குறிப்பிடாவிடினும், அது குறித்த பிரசார நடவடிக்கைகள் பல தரப்பினர் மத்தியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொகுதி அளவிலும் மாவட்ட ரீதியாகவும் விசேட கூட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஜா-எல ரன்ரீச் ஹோட்டலிலும் கடந்த சனிக்கிழமை வெற்றிகரமாக கூட்டம் ஒன்று இடம்பெற்றதாக நிமல் லன்சா இதன்போது கூறினார்.

கம்பஹா மாவட்டத்தை மையப்படுத்தி இடம்பெற்ற இந்த கூட்டத்துக்கு 13 தேர்தல் தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 50க்கும் மேற்பட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். அத்துடன், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் தொகுதி அமைப்பாளர்களை நியமித்து புதிய அரசியல் கூட்டணி குறித்து தெளிவுபடுத்தல்களை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிமல் லன்சா குறிப்பிட்டார்.

### ராஜகிரிய, இல.118 அலுவலகம்

ராஜகிரிய, லேக் டிரைவ் வீதி, 118 என்ற இடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் கொள்கை பரப்பு அலுவலகம் குறித்து ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இந்த அலுவலகம் கடந்த வாரம் முழுவதும் பல்வேறு திட்டங்களையும் சந்திப்புகளையும் முன்னெடுத்திருந்தது. புதிய அரசியல் கூட்டணியில் இணையும் உறுப்பினர்களுக்கு அங்கத்துவ அட்டை அலுவலகத்தின் ஊடாகவே வழங்கப்படுகிறது. பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளித்திருந்த முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்கள் பலர் புதிய அரசியல் கூட்டணிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

அது மாத்திரமன்றி மற்றுமொரு முக்கியமான விடயம் யாதெனில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலாளராக செயற்பட்ட சுபீஷ்வர பண்டார, பஷில் ராஜபக்ஷவின் தீவிர செயல்பாட்டாளரான எஸ்.அமரசிங்க ஆகியோரும் ராஜகிரிய, இல.118 அலுவலகத்துடன் இணைந்துள்ளமை பொதுஜன பெரமுனவுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இணை அமைப்புகளை புதிய அரசியல் கூட்டணியில் இணைத்துக்கொள்ளும் வகையில் சுபீஷ்வர பண்டார மற்றும் எஸ்.அமரசிங்க ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

### ரணில் - பஷில் சந்திப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளக அரசியல் கொந்தளிப்புகள் நாளுக்கு நாள் தீவிரமடைவதற்குபிரதானகாரணமாக புதிய அரசியல் கூட்டணியே காணப்படுகின்றது. ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் புதிய கூட்டணிக்கான திட்ட பணிகளை முன்னெடுக்கின்றமையினால் பொதுஜன பெரமுனவின் அரசியல் எதிர்காலம் என்பது நாளுக்கு நாள் கேள்விக்குறியாகி வருகிறது. குறிப்பாக இந்த நிலைமையானது ராஜபக்ஷர்களின் அரசியல் எதிர்காலத்துக்கும் சவால்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் பஷில் ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்த சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

### பஷில் வியூகம்

பொதுஜன பெரமுனவின் முழுமையான ஆதரவை ஏற்கனவே உங்களுக்கு வழங்கியுள்ளோம். எனவே ஆளும் கட்சிக்குள் இருந்துகொண்டு புதிய கூட்டணியமைக்கும் முயற்சிகளை நிறுத்தவேண்டும் என்று இதன் போது பஷில் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார். இவற்றை செவிமடுத்த ஜனாதிபதி ரணில், 'பொதுஜன பெரமுனவின் உள்ளக அரசியல் விடயங்களில் தலையிடுவது எந்தளவில் பொருத்தமானதாக இருக்கும் என்று புரியவில்லை' என கூறி சிறு புன்னகையுடன் கருத்து கூறுவதை நிறுத்திக்கொண்டார். புதிய கூட்டணி குறித்து தீர்க்கமானதொரு தீர்மானத்தை எடுக்காவிடின், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் அநாவசியமான சிக்கல்கள் அதிகரித்து உள்ளக நெருக்கடிகள் தீவிரமடையும். எனவே நிமல் லன்சா போன்றவர்களை அழைத்து உடன் பேசுமாறு பஷில் ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்தி கேட்டுக்கொண்டார்.

எதிர்கால தேர்தல்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்டு வரும் புதிய அரசியல் கூட்டணியை எவ்வாறேனும் தடுத்துவிட வேண்டும் என்ற வகையில் பஷில் ராஜபக்ஷ தற்போது செயல்பட தொடங்கியுள்ளார். பொதுஜன பெரமுனவில் உள்ள தனது விசுவாசிகளை கொண்டு புதிய அரசியல் கூட்டணிக்கு எதிரான வியூகங்களை பஷில் வகுத்துள்ள நிலையில், இதன் எதிரொலி ஓரிரு வாரங்களில் வெளிப்படும்.

### அதிருப்தியில் லன்சா குழு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான பஷில் ராஜபக்ஷவின் சந்திப்பு குறித்தும், புதிய அரசியல் கூட்டணிக்கு எதிரான பஷில் ராஜபக்ஷவின் செயல்பாடுகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா குழுவினருக்கு தகவல் கசிந்துள்ளது.

பஷில் ராஜபக்ஷவின் கோரிக்கைகள் குறித்து ஜனாதிபதியிடம் நேரடியாகவே கடும் அதிருப்தியை தெரிவித்துள்ள நிமல் லன்சா குழுவினர், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் புதிய அரசியல் கூட்டணியில் அரசியல் செயல்பாடுகளை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிருப்தியாளர்கள், பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் தரப்பினர்களாலேயே இந்த புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டணியுடன் இணைந்து செயல்படுவதற்கு குமார வெல்கம தலைமையிலான தரப்பினருக்கும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்காக மைத்திரிபால சிறிசேனவுடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நிமல் லன்சா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





நெற்றிப்பொறியன்



# இலங்கையில் நல்லிணக்கம்

நல்லிணக்கத்தைப் பற்றி எளிமையாக கூறுவதாயின், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தரப்புகளுக்கிடையிலான கருத்தொருமைப்பாடு என பொருள்படும். எனினும், நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் சிக்கலான கட்டமைப்பிற்குள் நல்லிணக்கம் என்பது ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது. பாரிய மற்றும் பரந்தளவான மனித உரிமை மீறல்களுக்குப் பின்னர் உறவுகளை மீளக் கட்டியெழுப்புவது நல்லிணக்கமாகும். நல்லிணக்கத்தை 'மெல்லிய' மற்றும் 'கனதியான' என இரண்டு வகைப்படுத்தலாம். நம்பிக்கை, மரியாதை மற்றும் பகிரப்பட்ட மதிப்புகள் இல்லாத சகவாழ்வை அடிப்படையாகக் கொண்டால் அந்த நல்லிணக்கம் 'மெல்லியதாக' காணப்படும். கண்ணியத்தை மீட்டெடுத்தல், ஒதுக்கப்படுதல் மற்றும் பாரபட்சம் காட்டப்படுவதற்கான காரணங்களை மாற்றியமைத்தல், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் அவர்களை நாட்டின் பிரஜைகளாக அவர்களுடைய நிலைக்கு மீள கொண்டுவருதல் 'கனதியான' நல்லிணக்கம் எனப்படுகின்றது. எனினும், நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் ஒரு பகுதி மாத்திரமே நல்லிணக்கமாகும். அத்தோடு, சூழலுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

### சர்வதேச ரீதியில் காணப்படும் உதாரணங்கள்

ஒரு தசாப்த காலம் தொடர்ந்த உள்நாட்டு யுத்தத்தால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட சியரா லியோன், நல்லிணக்க செயற்பாட்டிற்கு இலங்கைக்கு கூறக்கூடிய சிறந்த உதாரணமாகும். இந்த யுத்தத்தின்போது கிளர்ச்சியாளர்களின் 'புரட்சிகர ஐக்கிய முன்னணி' மற்றும் அரச படைகள் 10,000 இற்கும் அதிகமான சிறுவர் போராளிகளை உள்வாங்கின. இச்சிறுவர்கள் மனிதாபிமானமற்ற செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டனர். இச்சிறுவர்களை நல்லிணக்க செயற்பாட்டில் ஈடுபடுத்த சியரா லியோன் பல விசேட திட்டங்களை செயற்படுத்தியது. அவர்கள் போரினால் பாதிக்கப் பட்டவர்களாகவும் குற்றம் சாட்டப் பட்டவர்களாகவும் மாத்திரமன்றி எதிர்காலத்தை மாற்றியமைக்கக்கூடிய வல்லமை கொண்டவர்களாகவும் நோக்கப்பட்டனர். சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டம் 2007ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. தனித்துவமான கலப்பு நீதிமன்றம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பன நிறுவப்பட்டன.

பெருவில் 'ஷைனிங் பாத்' என்ற தீவிரவாத அமைப்பை அழித்த பின்னர் வந்த ஊழல் நிறைந்த மற்றும் சர்வாதிகார ஆட்சி, இலங்கையின் நல்லிணக்க செயற்பாட்டிற்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். உண்மை ஆணைக்குழுவை நிறுவுதல், காணாமல் போனமை தொடர்பில் விசாரணை நடத்துதல், நியாயமான நீதி செயன்முறை மற்றும் அமைதியை நிலைநாட்ட நினைவுகூரல்களை மேற்கொள்ளல் என பல செயற்பாடுகளை பெரு முன்னெடுக்க வேண்டியிருந்தது.

### இலங்கைக்கு நல்லிணக்கம் அவசியமா?

நல்லிணக்கத்தைப் பற்றி பேசும்போது 30 வருடகால யுத்தம் எமது நினைவிற்கு வருகின்றது. எனினும், இலங்கை வரலாற்றில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரம், 1971 கிளர்ச்சி மற்றும் 1983 கறுப்பு ஜூலை போன்ற பல சம்பவங்கள் நல்லிணக்கத்தை ஒரு தேவைப்பாடாக மாற்றின. இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தவறியதன் விளைவாகவே உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டது. மிகவும் அண்மையில் இடம்பெற்ற சம்பவமாக 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலை குறிப்பிடலாம். சமூகங்களுக்கு எதிரான பாரபட்சம், சமூக அநீதி, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் சமூகங்களுக்கு எதிரான அட்டூழியங்களுக்கு எதிராக இழப்பீடு பெற்றுக்கொடுக்காமை போன்றன இச்சம்பவங்களுக்கு பின்னாலுள்ள காரணங்களாகும். பல்லின மற்றும் பல மதங்களை கொண்ட நாடு என்ற ரீதியில் இச்சமூகங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் கடப்பாடு இலங்கைக்கு உண்டு. இதனடிப்படையில் நல்லிணக்கம் மிகவும் அவசியமானது.

### இலங்கையின் இதுவரையான செயற்பாடுகள்

நிலைமாறுகால நீதிப் பொறி முறையின் திருப்புமுனையாக கடந்த 2015ஆம் ஆண்டு மாறியது. கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு எதிராக சட்டரீதியான மற்றும் சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தின் கீழ் இலங்கை அரசாங்கம் இணங்கியது. காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, இழப்பீட்டு பொறிமுறை, குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான சட்டம் என்பன, மனித உரிமை அப்பட்டமான முறையில் மீறப்பட்ட சமூகங்களுக்கு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மாற்றங்களாகும். பாரியளவிலான மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், இலங்கை நல்லிணக்க பொறிமுறையில் கவனம் செலுத்தவேண்டும். இப்பின்னணியில், நல்லிணக்கம் தொடர்பாக செயற்பட்ட அநேகமான நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகள் தற்போது முடங்கிப்போயுள்ளமை பரிதாபமான விடயமாகும்.

### ஜனநாயகம் என்றால் என்ன?
### – பேனார்ட் எதிரிசிங்கே

பல காரணங்களால் ஜன நாயகம் என்றால் என்ன என்பதை கற்பது அவசியமானது. செயற்பாட்டு அரசியலில் இருந்து இளைஞர்கள் மற்றும் இளையவர்களைப் பிரித்தலும் குடிமக்கள் ஊழல் நிறைந்த மற்றும் கல்வியறிவற்ற பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுப்பதும் ஒரு நாட்டில் ஜனநாயகத்திற்கு நீண்டகால சேதங்களை ஏற்படுத்தும். ஜனநாயகத்தை இரண்டு அம்சங்களில் அடையாளம் காணலாம். அதில் மிகவும் பிரபலமான அம்சம் பிரதிநிதித்துவ அரசாங்கமாகும். இது அரச நிர்வாகத்தின் நடைமுறை பற்றிய தெளிவான அமைப்பை வெளிப் படுத்துகிறது. பிரபலமான அம்சத்தில் ஜனநாயகத்தைப் புரிந்துகொள்ள முயற்சித்தால், மீதமுள்ள அம்சங்களின் கடமைகளை குறைத்து மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே ஜனநாயகத்திற்கு வேறு இரண்டு அடையாளங்களும் உள்ளன. ஜனநாயகம் கொள்கைகளின் தொகுப்பாக, விழுமியங்களின் தொகுப்பாக அல்லது இலட்சிய மாதிரி என அடையாளம் காணப்படும்போது, அது குடிமக்களின் இறையாண்மையைக் குறிக்கிறது. குடிமக்களின் இறையாண்மை தொடர்பான ஆரம்ப அறிக்கைகளை பண்டைய அரசியல் இலக்கியங்களில் காணலாம்.

அரசியல் விஞ்ஞானிகள் இலட்சிய ஜனநாயகம் தோற்றம் பெற்றது இந்தியாவிலா, மத்திய கிழக்கிலா அல்லது பண்டைய கிரேக்க நாகரிகங்களிலா என்பதை கண்டுபிடிக்கும் விவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். "கௌடில்யரின் பொருளாதாரம் (கி.மு 312 - கி.மு 296) இப்போது சமூக ஊடகங்களில் பிரபலமாகிவிட்டதுடன், அது முடியாட்சியில் ஒரு அரசனின் கடமைகளையும், குடிமக்களின் முன்னேற்றத்திற்காக அவர் செய்யவேண்டிய சேவையையும் விளக்குகிறது. இந்த காரணத்தினால் பெரும்பாலான தேசபக்தர்கள் "கௌடில்யரின் பொருளாதாரம்" குறித்து கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் இது முடியாட்சியின் நியமனம் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் கட்டளைகள் தொடர்பில் குடிமக்கள் வைத்திருக்கும் அதிகாரத்தைப் பற்றி விவாதிக்கவில்லை. இலட்சிய ஜனநாயகம் பற்றிய விவாதத்தில், குடிமக்களின் அரசியல் அதிகாரம் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

ஜனநாயகத்தின்வரைவிலக்கணம் முதலில் கிரேக்க அரசியல் இலக்கியத்தில் மக்களின் இறையாண்மையின் கொள்கை என்று குறிப்பிடப்பட்டது. சைனிய வீரர்களுடன் தொடர்புடைய பெரிக் லிஷ் செய்த பிரபலமான நினைவு உரையின் ஒரு பிரித்தெடுப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. தாசிசிடீஸ் (கி.மு 454 - கி.மு 404/396) எழுதிய பல ∴போனீசிய வரலாற்றுப் புத்தகத்தில் இது இடம்பெற்றுள்ளது. "எங்கள் ஆட்சி சிலருக்கு பதிலாக பலரின் பங்களிப்பை ஏற்றுக்கொள்வதால் நாம் அதனைஜனநாயகம்என்றுஅழைக்கிறோம். எங்கள் சட்ட அமைப்பு அவர்களின் தனிப்பட்ட அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் பொதுவானதாகும். பொது சேவையில் ஈடுபட யாருக்கும் விருப்பம் இருந்தால், அந்த வாய்ப்பு அவர்களின் சமூக அந்தஸ்தில் அல்லாது அவர்களின் திறனைப் பொறுத்ததாகும். சமூக அந்தஸ்து அல்லது வறுமை திறமையினை இடையூறு செய்யாது".

சமூக இறையாண்மையைப் பற்றிய இந்த எண்ணக்கரு இடைக்கால சகாப்தத்தில் உருவாக்கப்பட்ட பிற அரசியல் எண்ணக்கருக்களால் மறைக்கப்பட்டுள்ளது. நிலத்தை வைத்திருக்கும் பிரபுத்துவ வர்க்கத்துடன் கைகோர்த்திருந்த முடியாட்சியின் அதிகாரம் முதலாளித்துவ நடுத்தர வர்க்கத்தால் சவால் செய்யப்பட்டது. இந்த எண்ணக்கருவிற்கான அரசியல் தீர்வாக, அரசியல் சிந்தனையாளர்கள் பிரதிநிதித்துவ ஆளுகை மற்றும் அரசியலமைப்பு வாதத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் மட்டுமே இந்த கருத்தை ஒரு சுவாரஸ்யமான முறையில் பேசிய ஒரே அரசியல்வாதியாவார். அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது (1891-1895) பென்சில்வேனியா மற்றும் கேடிஸ்பர்க்கில் இறக்கும் வீரர்களை நினைவுகூரும் வகையில் நினைவுச்சின்னத்தை திறக்கும் போது அவர் இந்த வார்த்தைகளை பேசியுள்ளார். "இந்த போரில் இறந்த வீரர்கள் வீணாக இறக்கவில்லை. அமெரிக்கா கடவுளின் கீழ் ஒரு புதிய வகை சுதந்திரத்தை அனுபவிக்கப் போகிறது. அது மக்களின் அரசாங்கமாகிறது. மக்களால், மக்களுக்காக, அது பூமியிலிருந்து அழியாது." இங்கே 'ஜனநாயகம்' என்ற சொல் லிங்கனால் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் பின்னர் அது அந்த அறிக்கையுடன் சேர்க்கப்பட்டது.

லிங்கனின் இந்த அறிக்கையானது ஜனநாயக அரசியலை நோக்கி வழிநடத்திய முக்கிய பழமொழிகளில் ஒன்றாக அடையாளம் காணப்படுகிறது. ஒருபுறம், இந்த அறிக்கை கிரேக்க காலத்திலிருந்து உருவாக்கப்பட்ட ஜனநாயகம் குடிமக்களை மையமாகக் கொண்ட ஆட்சியல்ல என்பதைக் குறிக்கிறது. ஒரு நாட்டை ஆட்சி செய்வதற்கான அதிகாரம் அந்த நாட்டின் குடிமக்களிடமே உள்ளது. ஆனால் உயர் வர்க்க சமுதாயத்திடம் இல்லை என்பது இதன் பொருளாகும். தாங்கள் நிறுவிய விதிகள் மற்றும் விதிமுறைகளைப் பொறுத்து நாட்டை ஆட்சி செய்ய ஒரு குடிமக்கள் குழுவை நியமிக்கும் அதிகாரம் குடிமக்களுக்கு உண்டு. நியமிக்கப்பட்ட அந்த குடிமக்கள் அனைவரின் நலனுக்காகவே நாட்டை ஆளுகிறார்கள். அவர்களின் சமூக அந்தஸ்து, அவர்கள் வசிக்கும் புவியியல் பகுதி அல்லது அவர்கள் பெறும் பதவிகள் மற்றும் சமூக ரீதியான ஏற்றுக்கொள்ளுகை ஆகியவற்றைப் பொறுத்து சிறப்பு சலுகைகளைப் பெறும் நோக்கத்துடன் அவர்கள் அத்தகைய பதவிகளை வகிப்பதில்லை.

19 ஆம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வாக்களிக்கும் உரிமையுடன் இந்த அரசியல் இலட்சியவாதம் யதார்த்தமானதா? குடிமக்களின் இறையாண்மை என்ற கருத்து பண்டைய காலத்தில் தோன்றியது என்பதுடன் அதில் நிறைய சமூக முரண்பாடுகள் நிலவுகின்றன. இது 19 ஆம் நூற்றாண்டில் மீண்டும் வெளிப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, கிரேக்க யுகத்தில் பெண்கள் எந்த அரசியல் உரிமைகளையும் கொண்டிருக்கவில்லை. குடிமக்களின் இனம் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்ப வாக்களிக்கும் உரிமை தீர்மானிக்கப்பட்டது. தற்போது இந்த கூறுகள் இறையாண்மையின் சக்தியை பலவீனப்படுத்துவதால் அவை அகற்றப்பட்டுள்ளன. இப்போது, ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்களிக்க உரிமை உண்டு.

11ஆம் பக்கம் பார்க்க...

மறவன்



# பிராந்திய செய்திகள்




## மருதமுனையில் மாபெரும் கண்டன பேரணி




இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்தி அப்பாவி உயிர்களை படுகொலை செய்வதை கைவிடவேண்டும் என தெரிவித்து மருதமுனையில் மாபெரும் கண்டன பேரணி வெள்ளிக்கிழமை (3) ஜும்மா தொழுகையின் பின்னர் நடைபெற்றது. இதன்போது ஐ.நா சபை அமைதி காப்பதன் மர்மம் என்ன? இன்ஷா அல்லாஹ் இறைவனின் நீதி கிடைக்கும் என கலாநிதி எம். எல் முபாரக் மதனி உருக்கமான உரையாற்றினார்.

அதுமாத்திரமன்றி இதன் போது குறித்த கண்டனப்பேரணி முடிவில் மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் எப்.எம்.அஹமது அன்சார் மௌலானா விசேட மகஜர் பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலியிடம் பள்ளிவாசல்களின் தலைவர்கள் சகிதம் ஒன்றிணைந்து கையளித்தனர்.

## மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை



பலத்த மின்னல் தாக்கம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த எச்சரிக்கை அறிவிப்பு இன்று (03) இரவு 11.30 மணி வரை செல்லுபடியாகும் என அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்கு, சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடக்கு, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இடியுடன் கூடிய மழையுடன் கூடிய பலத்த மின்னலுக்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் சுமார் 100 மில்லிமீற்றர் அளவில் கனமழையை எதிர்பார்க்கலாம். இடியுடன் கூடிய மழை அந்த பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசும். எனவே மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## மலையகத் தமிழரின் 200 வருடகால வரலாற்றினை நினைவு கூரும் கண்காட்சி

மலையகத் தமிழரின் 200 வருடகால வரலாற்றினை நினைவு கூரும் கண்காட்சி கடந்த நவம்பர் (2ம்), (3ம்) திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 5.30 வரை கல்முனை நகரிலுள்ள கிறிஸ்டா மண்டபத்தில் சமூக அபிவிருத்தி நிறுவக பிராந்திய இணைப்பாளர் எம். எஸ். ஜலில் தலைமையில் நடைபெற்றது. இலங்கை மலையகத் தமிழரின் 200 வருடகான பாரம்பரியத்தை நினைவு கூரும் இந் நிகழ்வினை சமூக அபிவிருத்தி நிறுவகம் (ISD) மற்றும் அம்பாறை மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றியம் (TRF) ஆகியன இணைந்து நடாத்தியது. இக் கண்காட்சி நிகழ்வில் மலையக தமிழரின் வரலாற்று ஆவணங்கள், பொருளாதார, கலை, கலாச்சார, அரசியல் மற்றும் சமூகவியல் தொடர்பான விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றிய இணைப்பாளர் எம்.ஐ. றியாழ் அவர்களின் நெறிப்படுத்தலில் இடம்பெறும் இந்நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், சமூக அபிவிருத்தி நிறுவக நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எல்.எம். லத்தீப், அட்டாளைச்சேனை கல்வியற்கல்லூரி பீடாதிபதி ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டனர்.

மேலும் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் (ISD) திட்ட முகாமையாளர் திரு.ஜனார்த்தன், கல்வி திணைக்கள அதிகாரிகள், சுகாதாரதுறை அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் TRF முக்கியஸ்தர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், அட்டாச்சேனை கல்வியல் கல்லூரி பயிலுனர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கிராம மட்ட அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் அங்கத்தவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வானது மலையக தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றினை பிரதிபலிக்கும் ஓர் நிகழ்வாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக ஒன்று திரண்ட கல்முனை மக்கள்



பலஸ்தீன் மக்களுக்காக ஆதரவு தெரிவித்து இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான கண்டன ஆர்ப்பாட்டமும் பேரணியும் கல்முனையில் வெள்ளிக்கிழமை (03) இடம்பெற்றது.

ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து கல்முனை முகைதீன் ஜும்ஆப்பள்ளிவாசல் அருகில் உலமாக்கள், கல்முனை அனைத்துப் பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், கல்முனை பொது அமைப்புக்கள், பெருமளவிலான பொது மக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இஸ்ரேலின் கொடூரத் தாக்குதலைக் கண்டித்து பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டதுடன், மேலும் கண்டனப் பேருரை மற்றும் பலஸ்தீன் மக்களுக்காக துஆப் பிரார்த்தனையும் இதன் போது இடம்பெற்றது.

## பிள்ளைகளுக்கு ஆங்கிலம் மற்றும் கம்பியூட்டர் அறிவை வழுங்க பெற்றார் முன்வரவேண்டும்



இன்று போட்டி நிறைந்த உலகில் வாழ்ந்து வருவதனால் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் மற்றும் கம்பியூட்டர் அறிவை வழங்க பெற்றார் முன்வரவேண்டும். ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, பேச ஒரு மனிதனால் முடியாவிட்டால் அவனால் எந்த விடயங்களையும் செய்ய முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகிவிடுவான் என்று கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வரும் Metro Politan college தவிசாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

Royal Institute Sainthamaruth Awarding ceremony -2023 வருடாந்த பரிசளிப்பு விழாவும் மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் (29) சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வரும் Metro Politan college தவிசாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பெற்றோர்கள் கட்டாயம் ஆங்கில அறிவையும் கணனி அறிவையும் உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கான களங்களை அமைத்துக்கொடுக்கும் பாடசாலைகளுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், தனவந்தர்கள் தங்களால் முடியுமான ஒத்துழைப்புக்களை வழங்க முன் வேண்டும் என்று அவர் வலியுறுத்தினர்.

குறிப்பாக, மாணவர்களை போதைப்பொருள் பாவனையின் பக்கம் ஈர்க்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இது எமது பிரதேசங்களில் மட்டுமல்ல எல்லா பிரதேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன. இத்திட்டத்தில் இன்றைய இளைஞர்களும், சிறுவர்களும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி விடுகின்றார்கள்.

அதிலிருந்து எமது பிள்ளைகளை பாதுகாத்துக்கொள்ளும் பாரிய பொறுப்பு பெற்றோர்களாகி உங்களிடமே உள்ளது என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

எமது பிள்ளைகளுக்கு சரியான வழிகாட்டுதல்களை வழங்குங்கள். சாதாரண தரம் அல்லது உயர் தரம் சித்தியடையவில்லை என்றால் கவலைப்படாதீர்கள். அதற்கேற்றவாறு அவர்களை பயிற்றுவித்து டிப்ளோமா தொடக்கம் கலாநிதி வரை செல்லக்கூடிய கல்வியை வழங்கக்கூடிய அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களை நாங்கள் தலைநகரில் 25 வருடங்களாகவும் கல்முனையில் 05 வருடங்களாகவும் நடாத்திக்கொண்டு வருகின்றோம்.

அவற்றில் உங்கள் பிள்ளைகளை கற்கவைத்து அதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி வருகிறோம் என்றார்.

# சினி துளிகள்




## சாதனை படைத்த கங்கணா ரனாவத்



பாலிவுட் சினிமாவில் பிரபல நடிகையாக இருப்பவர் கங்கனா ரனாவத். கடந்த மாதம் இவர் நடிப்பில் தேஜஸ் என்ற படம் வெளியானது.

இந்த படத்தில் விமானப்படை அதிகாரியாக நடித்துள்ளார்.

முதல் நாளிலிருந்தே இந்தப் படத்துக்குக் கூட்டம் வரவில்லை. திரையரங்குகளில் கூட்டம் வராததால் அந்த படத்தை நீக்கிவிட்டனர்.

அதுமட்டுமின்றி கங்கனா ரனாவத் நடிப்பில் வெளிவந்த சந்திரமுகி 2, தாக்கட், தலைவி, பங்கா, ஜட்ஜ்மென்டல் ஹே கியா, சிம்ரன், ரங்கூன், கட்டி பட்டி, ஐ லவ் நியூயார்க் போன்ற படங்களும் தோல்வியை சந்தித்தது.

இவர் நடிக்கும் படங்கள் தொடர் தோல்வியை சந்திப்பதால் கவலை அடைந்துள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் தொடர்ந்து 10 படங்கள் தோல்வியடைந்த நிலையில், சோதனையிலும் சாதனை படைத்துள்லார் கங்கனா. தொடர் 10 படங்கள் தோல்வி கொடுத்து வேறு யாரும் புரியாத சாதனையை செய்துள்ளார் என ரசிகர்கள் கூறி வருகிறார்கள்.

## இந்தியன் 2 படத்தில் கமலுக்கு 105 வயதா…!

ஷங்கர் இயக்கத்தில் உலக நாயகன் கமல் ஹாசன் நடித்து வரும் திரைப்படம் இந்தியன் 2. இப்படத்தை லைக்கா மற்றும் ரெட் ஜெயிண்ட் நிறுவனம் இணைந்து தயாரித்து வருகிறது.

பெரிதும் எதிர்பார்ப்பில் உருவாகி வரும் இப்படத்தில் கமலுடன் இணைந்து சித்தார்த், எஸ்.ஜே. சூர்யா, காஜல் அகர்வால், பிரியா பவானி ஷங்கர், ராகுல் ப்ரீத் சிங், மறைந்த நடிகர் விவேக் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இப்படத்திலிருந்து கமலின் இன்ட்ரோ வீடியோ வெளிவந்தது.

இந்தியன் முதல் பாகத்தில் எப்படி லஞ்சம் வாங்கும் அதிகாரிகளை சேனாபதி தண்டித்தாரோ அதேபோல் தற்போது இரண்டாவது பாகத்திலும் மீண்டும் என்ட்ரி கொடுக்கிறார்.

இந்நிலையில், இந்தியன் 2 படத்தில் சேனாபதி கதாபாத்திரத்திற்கு கிட்டதட்ட 105 வயது ஆகிறது.

இந்தியன் படத்தின் கதையின்படி சேனாபதி கதாபாத்திரம் 1918ஆம் ஆண்டு பிறந்தவர். சுதந்திரத்திற்காக போராடியவர் என்பதெல்லாம் அனைவரும் அறிவோம்.

இப்படியிருக்கையில் ரசிகர்கள் பலரும், சேனாபதிக்கு 105 வயது ஆகிறது இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என கேள்வி எழுப்பி வருகிறார்கள். இதுகுறித்து இயக்குனர் ஷங்கர் விரைவில் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



## விஜய் அரசியலுக்கு வரட்டும், வெற்றிமாறனின் பதில்

நடிகர் விஜய் சினிமாவில் மாஸ் காட்டி வந்தாலும், அரசியலில் வருகையை உணர்த்தும் வகையில் அவ்வப்போது பேசி வருகிறார்.

சமீபத்தில் நடந்து முடிந்த லியோ படத்தின் வெற்றி விழாவில் கூட படத்தை குறித்து பேசாமல் அதிகமாக அரசியல் வருகை பற்றி தான் பேசினார்.

இந்நிலையில் பிரபல இயக்குனர் வெற்றிமாறன் விஜய்யின் அரசியல் வருகை தொடர்பாக பேசியுள்ளார்.

அதில் அவர் கூறுகையில், விஜய் அரசியலில் வர வேண்டும் என்ற நோக்கில் தான் செயல்பட்டு வருகிறார்.

அவர் அரசியலுக்கு வரட்டும். ஆனால் முன்னதாக அதற்கான கள செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

அரசியல் என்பது அனைவருக்கும் சவாலானது அதனை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் உள்ளவர்களே அரசியலுக்குள் வர விரும்புகிறார்கள் என்று வெற்றி மாறன் பேசியுள்ளார்.



## சின்னத்திரை நிகழ்ச்சிக்கு வரப்போகும் நடிகை மாளவிகா

பல வருடங்களுக்கு முன்பு தமிழ் சினிமாவில் அறிமுகமானாலும் வாள மீனுக்கும் என்ற பாடல் மூலம் பெரிய அளவில் ரசிகர்களிடம் ரீச் ஆனவர் நடிகை மாளவிகா.

1999ம் ஆண்டு உன்னை தேடி என்ற படத்தின் மூலம் சினிமாவில் நாயகியாக அறிமுகமான இவர் அதன்பிறகு தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என பல மொழிகளில் படங்கள் நடித்து டொப் நாயகியாக வந்தார்.

ஆனால் 2003ம் ஆண்டுகளுக்கு பிறகு அவர் நிறைய படங்களில் சிறப்பு தோற்றத்தில் மட்டுமே நடித்து வந்தார்.

ஒருகட்டத்தில் அதாவது 2007ம் ஆண்டு சுமேஷ் மேனன் என்பவரை திருமணம் செய்துகொண்டு செட்டில் ஆனார்.

இன்ஸ்டாவில் புகைப்படங்களாக வெளியிட்டு ஆக்டீவாக இருந்துவந்த மாளவிகா இப்போது சூப்பர் நிகழ்ச்சி மூலம் சின்னத்திரை வர உள்ளார்.

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் ஊ சொல்றியா ஊ ஊ சொல்றியா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வர இருக்கிறாராம்.

## நடிகை சமந்தாவின் கிளாமர் போட்டோஷூட் ஸ்டில்



## நடிகை அமலா பால் தனது காதலரை இரண்டாம் திருமணம் செய்திருக்கும் ஸ்டில் இதோ..





# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



**சுழியோடி**

**25**

யாழ் கோட்டை முற்றுகை காலத்தில் கோட்டையில் இருந்த படையினர் அக்கோட்டையை கைவிட்டு ஓடுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று பசீலன் (200). இந்த பசீலன் வெடித்து ஏற்படுத்தும் சேதத்தை விட அதனால் எழும் ஒலியின் அதிர்வினால் இதயத்துடிப்பு நின்று பலியான படையினரின் எண்ணிக்கை அதிகம். அத்துடன் செவிப்பறை வெடித்து காது கேளாத நிலைக்குள்ளான படையினரும் உண்டு. கோட்டை முற்றுகையின்போது, தங்கள் தாக்குதலை நிறுத்துகிறோம், நீங்கள் பசீலன் அடிப்பதை நிறுத்துங்கள் என்று படையினர் வோக்கி டாக்கியில் கெஞ்சி கேட்கின்ற அளவிற்கு அதன் தாக்கம் இருந்தது. ஆரம்ப காலத்தில் விடுதலைப்புலிகளால் வடிவமைக்கப்பட்ட முதலாவது பாரிய எறிகணை பசீலனாகத்தான் இருந்தது.

இதன் பின்னரான போரிலும் ஆயுதங்களை கையாளுவதிலும் தேர்ச்சி பெற்றிருந்த விடுதலைப் புலிகளால் சமாதான காலத்திற்கு பின்னான களத்தில் பயன்படுத்தப்பட்டவைதான் சமாதனம், சண்டியன், எறிகணைகள். பசீலனே படையினருக்கு அந்தளவிற்கு அச்சத்தை ஏற்படுத்தியது என்றால், சண்டியன் சமாதனம் பற்றி சொல்லவே தேவையில்லை. இந்த இரண்டும் ஏவப்பட்டால் படையினர் களமுனையில் நிற்காமல் தப்பியோடுவார்கள் என்பது உறுதி.

அந்தளவிற்கு இந்த எறிகணைகள் ஏவப்படுவது தெரிந்தாலே படையினர் களமுனை களை விட்டு தப்பியோடும் நிகழ்வுகளும் நடந்தன. இந்த இரண்டு எறிகணைகளும் இழுத்து நகர்த்தி செல்லக்கூடிய வகையில் இரண்டு தண்டவாள துண்டுகளை கொண்டு இதற்கென வடிவமைக்கப்பட்ட உளவு இயந்திரத்தில் வைத்துதான் ஏவப்பட்டன.

வேகமாக கொண்டு நகர்த்தக்கூடிய வகையில் சண்டியன் சமாதனம் எறிகணையின் ஏவுதளம் இருந்தது. இந்த எறிகணைகள் (1000) மீற்றர் (சுமார் ஒரு கிலோமீற்றர்) தூரம்வரை சென்று தாக்கவல்லது சமாதனம் எறிகணையின் நிறை சுமார் நூறு கிலோவிற்கும் அதிகமாக இருக்கும். அதனை தூக்கி போடுவதற்கு குறைந்தது இருவர் என்றாலும் வேண்டும். இதனை இயக்கும் இடத்தில் இயக்குபவர்கள் நிக்கமாட்டார்கள். சுமார் (50) மீற்றர் தூரத்தில் நின்றுதான் இயக்கவைப்பார்கள். இந்த எறிகணை செலுத்தியை இயக்க சுமார் ஆறு பேர்கள் தேவை.

அதாவது இந்த எறிகணையை பற்றி சொல்வதானால் அதன் வடிவம் பாரிய ஏவுகணை போன்று இருக்கும். பின்பக்கத்தில் ஆறு மல்ரி பெறல் எறிகணைகள் பொருத்தப்பட்டு இருக்கும். இந்த மல்ரிபெரல் எறிகணைகள் தான் முன்னிருக்கும் எறிகணையை தாங்கிசெல்லும். அந்த இலக்கில் வீழ்ந்து வெடிக்கும் போது பாரிய சத்தம் கேட்கும். அதன் துண்டுகள் கூட படையினரில் படத்தேவையில்லை இது வெடிக்கும் போது எழும் சத்தமே படையினரை கொன்றுவிடும்.

இதன் நேரடி தாக்கம் சுமார் (50) மீற்றர் சுற்றுவட்டத்தை அழிக்கும். இதுதான் சமாதனம் என்று சண்டைக்களங்களில் போராளிகளால் பேசப்படும் எறிகணை.

சண்டியனும் இதே வடிவம் தான். ஆனால் அதன் நிறை கொஞ்சம் குறைவு (65) கிலோ கிராம் தான் அத்துடன் சமாதனம் போன்று இது படையினருக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால் படையினர் இதன் பெயரை சொல்லி அச்சப்படும் அளவிற்கு அதன் தாக்கம் இருந்தது. இந்த எறிகணைகள் முதன் முதல் முகமாலை படையினர் மீதுதான் பரீசித்து பார்க்கப்பட்டது. அதன் பின்னர் முகமாலையில் நின்ற படையினருக்கு சமாதனம் சண்டியன் என்றாலே போதும் அச்சத்தில் உறைந்து விடுவார்கள். இந்த இரண்டும் எதிரிக்கு பாரிய இழப்பினை கொடுத்து விடுதலைப்புலிகளுக்கு பல வெற்றி தாக்குதல்களுக்கு காரணமாக அமைந்தது. இதனால் இந்த எறிகணை உற்பத்தி அதிகரிக்கப்பட்டு மன்னார், வவுனியா, மணலாறு, போன்ற களமுனைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

இந்த எறிகணைகளுக்கான வெடி மருந்துகளை சிறிலங்கா வான்படையே தந்துதவியது. கிபீர் ஏவி வெடிக்காத குண்டுகளில் இருந்தே இவற்றுக்கான மருந்துகள் பெறப்படுகின்றன. இதை போன்று கடலில் கரும்புலி படகுகளின் வெடிமருந்து வடிவங்கள் மாற்றி அமைக்கப்பட்டு எதிரிக்கு பலத்த இழப்பினை ஏற்படுத்துகின்றார்கள்.

இதேவேளை அன்று விடுதலைப் புலிகளுடன் (சினைப்பர்) எனப்படும் குறிசூட்டு துப்பாக்கி பெருமளவில் இருக்கவில்லை. இதனால் அந்த தேவையை ஈடுசெய்ய எ.கே (47) துப்பாக்கிகளுக்கு தொலை நோக்கிகளை பொருத்தி புதிய முறையிலான சினைப்பர் துப்பாக்கிகள் உருவாக்கப்பட்டன, அதாவது குறுகிய தூரத்தில் நின்றுகொண்டு எதிரியை குறிபார்த்து சுடும் வகையிலும் இலகுவாக கொண்டுசெல்ல கூடிய வகையிலும் எ.கே (47) துப்பாக்கி விடுதலைப்புலிகளால் வடிவமைக்கப்படுகின்றன.

இந்த எ.கே (47) விடுதலைப்புலிகள் செண்பகம் என பெயரிட்டிருந்தனர். இதற்கான ரவைகள் கூட சாதாரண எ கே (47) பாவிக்கப்படும் ரவைகள் பயன்படுத்தப்படவில்லை, கவசதுளைப்பி ரவைகள் பயன் படுத்தப்படுகின்றது. இவ்வாறான துப்பாக்கிகள் ஏராளமாக வடிவமைக்கப்படுகின்றன. சினைப்பர் துப்பாக்கிகளுக்கு வளிதிறத்தல் ஏராளமான சினைப்பர் அணிகள் உருவாகின்றன.

தளபதி தீபன் அவர்களின் கீழ் கிளாலி முகமாலை நாகர்கோவில் தளங்களில் சினைப்பர் அணிகள் உள்நுழைந்து ஏராளமான இராணுவத்தினரை கொன்றிருந்தனர். இதேபோன்று மன்னார் களத்தின் தளபதி பானுவின் கட்டமைப்பின் கீழ் சினைப்பர் அணிகள் செயற்பட்டு எதிரிக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தியிருந்தனர். இவ்வாறு விடுதலைப்புலிகளின் சினைப்பர் அணிகள் சண்டைகளின் போது ஊடுருவி நடத்திய பல தாக்குதல்களை வியப்பூட்டுபவை. சிறிலங்காவிற்கு சண்டைகளங்களில் பாரிய இழப்பினை ஏற்படுத்துவதில் பெரும்பங்கு சினைப்பர் அணிக்கும் உண்டு. சிறிலங்கா படைத்தரப்பே இந்த சினைப்பர் அணியால் ஏற்பட்ட இழப்புகள் குறித்து கடந்த காலங்களில் தெரிவித்திருந்தமை இங்கு அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்.

இதேவேளை அன்றைய காலங்களில் சிறிலங்கா ஆழ ஊடுருவும் படையணியின் தாக்குதல்கள் வன்னி பெருநிலப்பரப்பில் அதிகரித்து இருந்தன. இதனால் தளபதிகளுக்கும் பொறுப்பாளர்களுக்கும் எதிரியின் கிளைமோர் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு வழங்க அவர்கள் பயணம் செய்யும் வாகனங்கள் சன்னங்கள் துப்பாக்கி ரவைகள் துளைக்காத வண்ணம் பாதுகாப்பாக இரும்பு தகட்டினால் வடிவமைக்கப்பட்டு பரீசித்து பார்க்கப்பட்டு துருப்புக்காவி என பெயர்சொல்லி அழைக்கப்பட்டு. பெரும்பாலான தளபதிகள், படையணி போராளிகளை ஏற்றி இறக்குவதற்கு வழங்கப்படுகின்றது.

இதேவேளை பாதைகள் மூடப்பட்டதனால் உணவு பொருட்களுக்கான நெருக்கடிகள் அதிகரிக்க தொடங்கின. அத்துடன் சில களமுனைகளுக்கு அருகில் சமைக்க முடியாத அளவிற்கு சண்டை தொடர்ச்சியாக உக்கிரமாக நடைபெற்று கொண்டிருந்தது. சமைத்துசென்று உணவுகளை வழங்க முடியாத களமுனைகளுக்கு (15) நாட்களுக்கு ஏற்ற வகையில் உலருணவு பொருட்கள் தயாரிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டு களமுனை போராளிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதேவேளை மருத்துவத்துறை ஏராளமான மருத்துவர்களை உருவாக்கியிருந்தது. இதனால் விடுதலைப்புலிகளின் மருத்துவ பிரிவும் விரிவாக்கம் பெற்று இருந்தது. மருத்துவ போராளிகளில் பலர் பொது மக்களின் மருத்துவ மனைகளில் இணைந்து மக்களுக்கு சேவையாற்றி தங்கள் அனுபவ அறிவை வளர்த்துக்கொண்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் மருத்துவ பிரிவால் ஏராளமான சத்திரசிகிச்சை முகாம்கள் அமைக்கப்பட்டு இருந்தன. களமுனைக்கு அருகில் கூட சத்திரசிகிச்சை முகாம்கள் அமைக்கப்பட்டு காயமடையும் போராளிகள் காப்பாற்றப் படுகின்றார்கள். போராளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியதை அடுத்து நிர்வாக அலகுகள் விடுதலைப்புலிகளினால் அதிகரிக்கப்படுகின்றது.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கட்டுமானங்கள் வளர்ச்சியான கட்டத்தில் இருக்கும்போதுதான் தேசியத் தலைவரால் புதிய தாக்குதல் திட்டம் ஒன்று வகுக்கப்படுகிறது.



தொடரும்...

# பிரபாகரன் ஏன் போராட நிர்பந்திக்கப்பட்டார்?

## வரலாறுகளை மூடிமறைக்கிறது அரசு

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

1969ல் தமிழ் விடுதலை இயக்கம் குட்டிமணி, தங்கதுரை என்ற இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1970ல் சிறிமாவோ ஆட்சிய மைத்தார். இந்தத்தேர்தலில் பிரிவினைவாதத்தை முன்வைத்த தமிழ்க்கட்சிகள் வெற்றி பெற முடியாமல்போயின. 1970–77 வரை தமிழர்கள் கலவரங்களுக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாக் கப்பட்டனர். சிறிமாவோ தமிழ் பத்திரிகைகளுக்கும், தமிழ் புத்தக வெளியீடுகளுக்கும் தடைவிதித்த தோடு தமிழ்நாட்டிலிருந்து வரும் தமிழ்த் திரைப்படங்களுக்கும் தடைவிதித்ததோடு இந்தியாவினுடைய கலாசார இணைப்பைத் துண்டித்தார்.

தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்குள் நுழைவதிலுள்ள எண்ணிக்கையைக் குறைத்தார். ஒரே நுழைவுத்தேர்வு ஆனால் தமிழ் மாணவர்கள் 30வீத மதிப்பெண்களை அதிகம் பெறவேண்டும் என்ற இச்சட்டமே தமிழ் மாணவர் பேரவை ஆரம்பிக்க காரணமாக அமைந்தது. தமிழ் பகுதிகளுக்கும் இம்மாணவப் பேரவைகள் உதயமாகின. பின் நாட்களில் அரசியல் தலைவர்கள் இம்மாணவப்பேரவைகளில் இருந்து வரத்தொடங்கினர்.

சிலோனுக்கு புதிய அரசியற் சட்டம் அமைக்கும் குழுவில் செல்வாவும் அங்கம் வகித்தார். அரசியற் சட்டம் சிங்களவர்களுக்கு சாதகமாக உருவாக்கப்படுவதை அறிந்த அவர் அக்குழுவிலிருந்து விலகினார். மே 14 1972ல் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து தமிழர் கூட்டணியை அமைத்து இலங்கை அரசியலுக்குள் சுயமாக நிலம் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

மே 22 சிறிமாவோ புதிய அரசியற் சட்டத்தினை அறிமுகப்படுத்தினார். சிலோன் சிறிலங்கா என பெயர் மாற்றம் பெற்று பௌத்த சிங்கள தேசம் என அறிவிக்கப்பட்டதுடன் சிங்கள மொழி மட்டுமே அரச மொழியாக அறிவிக்கப்பட்டு, பௌத்தத்திற்கு தனி அந்தஸ்து வழங்கப்பட்டு சிறுபான்மையினருக்கு கொடுக்கப்பட்ட அரசியல் சட்ட பாதுகாப்பினை விளக்கினார். இதனை எதிர்த்த செல்வா உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து அடுத்த தேர்தலில் நிற்கப் போவதாகவும், சுய ஆட்சி கொண்ட தமிழ் மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் மக்கள் முன் வைக்கப்போவதாகவும், மக்கள் அவரை வெற்றி பெறச்செய்தால் சுயாட்சிதான் அவருடைய கோரிக்கை எனக்கொண்டு புதிய அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரவேண்டும் என்றார். 1972–74 வரை நிலச்சீர்திருத்தச்சட்டத்தின் மூலம் தமிழர்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது. இதன் காரணமாக திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பில் சிங்கள மக்களின் தொகை அதிகரித்தது.

1973ல் அடுத்த திருப்புமுனையாக உலகத்தமிழர் ஆராய்ச்சி மாநாட்டிற்காக அரசினை நாடினர். அரசுஒத்துழைக்கமறுத்தது. இதனை சவாலாக ஏற்று தாங்களே நடத்துவது என முடிவெடுத்தனர். 1974ல் மாநாட்டின் கடைசி நாளில் சிங்களவர்கள் கூட்டத்தினுள்ளே புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

கலவரத்தில் 09 பேர் மின்சாரம் தாக்கி இறக்க, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றனர். தமிழர் தம் தாய்மொழிக்கு எதிராக நடந்த அவமானம் என கருதினர். தமிழர் கூட்டணி அரசின் அடக்குமுறைகளுக்கும், விரைவான தீர்வுகளை எதிர்பாக்கும் அரசியல் சினங்கொண்ட இளைஞர்களுக்கும் நடுவில் நின்று தவித்தது.

இம்மாநாட்டிற்கு காரணமாக விருந்த சிவகுமாரனும் அவரின் சகாக்களும் சந்திரசேகராவையும் யாழ்ப்பாணமேயர்துரையப்பாவையும் கொலை செய்யத் திட்டமிட்டனர். இரண்டு கொலை முயற்சிகளில் சந்திரசேகரா தப்பிவிட்டார். பொலிசார் சிவகுமாரனை துரத்திவர கரும்புதோட்டத்தினுள்ளே ஓடியவரை துரத்திப்பிடிக்க சயனைட் உட்கொண்டார். தேசத்திற்காக செய் அல்லது செத்துமடி என்ற கோட்பாட்டிற்கு முதலில் வித்திட்டார்.

1975ல் மூன்றாண்டுகள் காத்திருந்த செல்வா நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். இவ்வெற்றியை தமிழ் மக்களின் சுய ஆட்சிக் கோரிக்கையாக ஏற்க அரசு மறுத்தது. மே 22 1976ல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் முன்னணி, தமிழர் விடுதலை முன்னணி என உருமாறியது.

முதன் முறையாக இலங்கையரசின் கீழ் சுய ஆட்சி என்ற கோரிக்கையை கைவிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கி சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். நவம்பர் 19ல் பாராளுமன்றத்தில் உருக்கமாக தந்தை செல்வா உரையாற்றினார். தமிழீழம் என்ற கோரிக்கையை கைவிடுகின்றோம். ஒரு நாள் சுதந்திர தமிழீழம் மலரும் என்றார். ஏப்ரல் 29ல் தந்தை செல்வா அவர்கள் மாரடைப்பால் இறந்தார். அடுத்த பொதுத்தேர்தலில் சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கையை தமிழர் விடுதலை முன்னணி மக்கள் முன் வைத்தது. சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கை 1972ல் புறந்தள்ளி மக்கள் இப்போது அதனை ஏற்று 82சதவீத வாக்குகளுடன் வெற்றி பெறச்செய்தனர்.

செல்வாவின் மறைவிற்கு பின் மிதவாத அரசியல் மெதுவாக பின்னடைவாக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை முன்னெடுத்துச் சென்றனர். அடக்குமுறைச் சிங்கள இனவாதம் அதை விட அதிகாரமிக்க தமிழினத்தினை வளர்த்துவிட்டது. பாகுபாடுகளை வளர்த்த சிங்கள அரசுகள் சிறுபான்மையினரை விளிம்பிற்குள் தள்ள 1980களில் உள்நாட்டுப் போர் தொடங்க காரண மாகவிருந்தது.

**07ஆம் பக்கத் தொடர்ச்சி...**

பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கான அடிப்படை தகுதி வாக்களிக்கும் உரிமையாகும். 21 ஆம் நூற்றாண்டில் அனைத்து தேர்தல்களும் சுதந்திரமாகவும் நியாயமானதாகவும்கருதப்படுகின்றன. ஆனால் தேர்தல்கள் குடிமக்களின் இறையாண்மையைப் பாதுகாக்கிறதா என்பதைக் குறிப்பிடுவது கடினமாகும். குடிமக்கள் தங்களை தனிப்பட்ட வேட்பாளர்களாக முன்வைப்பதை விட பெரும்பாலான அரசியல் கட்சிகள் தங்கள் ஆதரவாளர்களை தேர்தல்களில் வேட்பாளர்களாக முன்வைக்க முயற்சிக்கின்றன. பல தொழிலதிபர்கள் தங்கள் அடிமைகளாகக் கருதி தங்களுக்கு விருப்பமான வேட்பாளரை வெற்றி பெற வைப்பதற்காக பெரிய அளவில் பணத்தை செலவழிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளனர். மேற்கூறப்பட்ட காரணங்களைத் தவிர, ஊடகங்கள் சில அரசியல் கட்சிகளுக்கு பக்கச் சார்பாக இருப்பது, தற்போதுள்ள தேர்தல் முறை குடிமக்களின் இறையாண்மையைப் பாதுகாக்கிறதா என கண்டறிவது ஒரு முக்கியமான வாதமாகும்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளைத் தவிர, பெரும்பாலான நாடுகளில் வாக்களிக்கும் உரிமை மீதான நம்பிக்கை குறைவாகும். 1946 இலிருந்து 1964 இற்கிடையில் வாழ்ந்த தலைமுறையை வாக்களிக்கும் உரிமை மிகவும் ஈர்த்தது. ஆனால் தற்போதைய சமுதாயத்தில் பெரும் பான்மையானவர்கள் இளைஞர்களாக இருப்பதால், நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் தேர்தல்கள் குறித்து பெருமளவில் அக்கறைப்படுவதில்லை. அதற்கு பிரதானமான காரணம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் கட்சி அரசியலாக மாற்றமடைவதாகும். ஆனால் அது ஜனநாயகம் தொடர்பான இறையாண்மையுடன் இளம் தலைமுறையினர் வாழ்வதற்கு தடையல்ல.

குடிமக்களின் இறை யாண்மையின் ஜனநாயகஎண்ணக்கரு, ஆட்சியாளர்களை விமர்சிப்பதற்கும், கேள்வி கேட்பதற்கும், ஆளும் முறை பற்றி ஜனாதிபதி அல்லது பிரதமருடன் விவாதிப்பதற்கும் நமக்கு உரிமையை வழங்குகிறது. பாரம்பரிய சமுதாயத்தில் நடக்கும் இத்தகைய உரையாடல்கள் கனவுகள் மட்டுமல்லாது அவை ஒரு நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் சக்திகளும் கூறுகளும் ஆகும்.

### உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவரான “வாரன் பபேட்” நமக்கு கூறும் அறிவுரை

1. ஒரு சம்பாத்தியம் மட்டும் போதாது. இரண்டாவது வருமானம் வரும் வகையில் ஏதாவது ஏற்பாடு செய்து கொள்.
(ஒன்று நஷ்டமானாலும், மற்றொன்று நம்மை காப்பாற்றும்.)

2. தேவையில்லாத பொருள்களை வாங்கினால், விரைவிலேயே தேவையுள்ள அனைத்தையும் விற்க நேரிடும்.
(ஆடம்பரத்தை தவிர்த்திடுங்கள். தேவையில்லாத ஆடம்பரம் நமது சந்ததியை தெருவில் நிறுத்திவிடும்.)

3. சேமித்த பிறகு இருக்கும் மீதத்தை தான் செலவு செய்ய வேண்டும். செலவு செய்த பிறகு இருக்கும் மீதத்தை சேமிக்கக்கூடாது.
(சேமிப்பு என்பது மிக மிக முக்கியமானது.)

4. ஆற்றின் ஆழத்தை இரண்டு கால்களாலும் அளவிடக்கூடாது. (எதிலும் முன்னெச்சரிக்கை அவசியம்.)

5. அனைத்து முட்டைகளையும் ஒரே கூடையில் வைக்காதே.
(நஷ்டம் ஏற்பட்டாலும், வாழ்க்கையை இழக்கும் அளவிற்கு இருக்கக்கூடாது என்பதற்கான சிந்தனை.)

6. நேர்மை ஒரு விலை மதிப்பற்றது. அது அனைவரிடமும் இருக்கும் என்று எதிர்பார்க்காதீர்கள்.
(மிக அவசியமான ஒன்று. எல்லோரையும் முழுமையாக நம்பிவிடக்கூடாது.)

**இவர்களிடம் கேட்டுப் பாருங்கள் நேரத்தின் மதிப்பை சொல்வார்கள்.**

ஒரு மில்லி செகண்டின் மதிப்பை ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வாங்கியவரைக் கேட்டால் தெரியும்.
ஒரு செகண்டின் மதிப்பை விபத்தில் உயிர் தப்பியவரைக் கேட்டால் தெரியும்.
ஒரு நிமிடத்தின் மதிப்பை தூக்கிலிடப் படும் கைதியைக் கேட்டால் தெரியும்.
ஒரு மணி நேரத்தின் மதிப்பை உயிர் காக்க போராடும் மருத்துவரைக் கேட்டால் தெரியும்.

ஒரு நாளின் மதிப்பை அன்று வேலை இல்லாத தினக் கூலி தொழிளாலரைக் கேட்டால் தெரியும்.

ஒரு வாரத்தின் மதிப்பை வாரப் பத்திரிக்கை ஒன்றின் ஆசிரியரைக் கேட்டால் தெரியும்.

ஒரு மாதத்தின் மதிப்பை குறைப் பிரசவம் ஆகும் ஒரு தாயைக் கேட்டால் தெரியும்.
ஒரு வருடத்தின் மதிப்பை தேர்வில் தோல்வியுற்ற ஒரு மாணவனைக் கேட்டால் தெரியும்.
நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தை பார்...ஓடுவது முள் அல்ல.! உன் வாழ்க்கை.

# எமது போராட்ட வடிவம் இளந் தலைமுறையினரிடம் குறிக்கோள் மாறாத அற எழுச்சியினை உருவாக்கவேண்டும்

- நிலவன் -

தமிழ் இன விடுதலைப் போராட்டம்" என்பது அது எவ்வகையில் அமைந்தாலும் குறித்த தமிழ் இன மக்களின் பூரண ஆதரவு இல்லாமல் மேற்கொள்ள முடியாத ஒன்று. ஒட்டு மொத்த மக்களும் விடுதலையென்ற ஒரே இலட்சியத்துக்காகத் தமது பங்களிப்பைச் செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு முன்வரும் போது தான், விடுதலைக்கான மக்கள் புரட்சியும், அதன் மூலமான இன விடுதலையும் சாத்தியமாகும்.

தமிழர் நாம் ஆண்ட பூமி தமிழுக்கும், தமிழ் மக்களுக்குமான தனித்துவ வரலாற்றைக் கொண்டு வாழ்ந்த இனம். தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட "தனிநாடு தமிழீழம்" வேண்டும் எனப் பிரகடனப்படுத்தி சர்வதேச சமூகத்தைத் தமிழர் தேசத்தின் பால் திரும்பிப் பார்க்க வைத்த இன விடுதலைப் போராட்டம். அந்தப் போராட்டத்தைச் சிங்களப் பேரினவாத அரசு உலகப் பேராதிக்க நாடுகளின் துணையோடு நசுக்கி எமது நாட்டைச் சுடுகாடாக்கி நிறுத்தியிருக்கின்றது.

உலகத்தில் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கும் மூத்த தமிழ் இனம் இன்றைக்குச் சொந்த நாட்டில் வாழ முடியாத ஏதிலிகளாக வாழ்கின்றோம். தமிழ் மக்கள் நாட்டை சிங்கள பேரினவாத அரசு ஆக்கிரமித்திட உறவை இழந்து வீட்டை இழந்து, உடமை இழந்து, நடைப்பிணமாக வாழும் இனமாகத் தமிழ்த் தேசிய இனம் 130 நாடுகளில் ஏதிலிகளாகப் புலம்பெயர்ந்து வாழ்கின்றோம். இன அழிப்பிற்கு உள்ளாகி நாடற்ற இனமாக உலகத்தாரிடம் நீதி கேட்டு நிற்கின்றோம். தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கும் உரிமைக்கும் போராடிய மக்களின் தமிழ் இராணுவம் தான் தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழ மக்களின் இறைமையை மீட்டெடுத்து, புரட்சிகர வரலாற்றுப்பயணத்திற்காக, தமிழீழ தனியரசை அமைத்துக் காட்டினார்கள்.

விடுதலைப் பயணத்தில் உறுதியுடன் எழுச்சிகொண்ட, விடுதலைத்தீ தமிழ் பேசும் மக்கள் மனதிலும் எரிந்து கொண்டுதான் இருக்கிறது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தை வீரத்தின் உச்சத்துக்கு எடுத்துச்சென்ற வீரம் செறிந்த வாழ்வியலாலும் வளர்த்தெடுத்த தமிழ்த் தேசியம் எனும் பெருவிருட்சம், நாடுகள் எல்லைகள் கடந்தும் தலைமுறைகள் கடந்தும் பெருவளர்ச்சியுற்று நிற்கின்றது. தனித்தமிழீழம் அமைக்கத் தமிழரால் முடியும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துடன் விடுதலைப் புலிகளை 'தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் சர்வதேச சமூகம் நிகழ்த்தியிருந்த சந்திப்புகளும் பேச்சுகளும் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தியிருந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏன் தொடங்கியது, தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு உருவாகினார்கள், எங்கிருந்து உருவாகினார்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு என்ன, ஏன் தமிழ் மக்கள் எதற்காகப் போராடினார்கள் என்று தெரிந்தும் சில அடிவருடிகள் சந்தர்ப்பத்திற்கேற்ப பச்சோந்திகளாக மாறி இன விடுதலைக்கு போராடியவர்கள் "ஒரு தீவிரவாத இயக்கம்" என்ற சொல்லுக்குள் சிங்களவர்களுடன் சேர்ந்து அறிக்கைகள் விட்டுக் கொண்டு இன விடுதலையை நசுக்குகின்றார்கள். அரச பயங்கரவாத அடக்குமுறைக்கு எதிரான மக்கள் தான், தங்கள் உயிர் பாதுகாப்புச் சுதந்திரம் வேண்டி விழிப்புடன், எழுச்சியடைந்து போராடினார்கள். அந்த "மக்கள் தான் விடுதலைப் புலிகள்! விடுதலைப் புலிகள் தான் அந்த மக்கள்"! என்பதை உலகிற்கு எடுத்துரைத்தார்கள்.

தமிழீழ தனியரசைக் கட்டியெழுப்புவதற்கு ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல அகிம்சை வழியிலும் போராடுவோம் என்பதை உலகுக்குப் பறைசாற்ற 5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களின் உரிமைக்காக 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ்.நல்லூரின் வீதியில் நீராகாரம் அருந்தாமல் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடாத்தி ஈகைச் சாவைத்தழுவிக் கொண்ட தியாக தீபம் லெப் கேணல் திலீபனின் "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்ற விடுதலை வாசகத்தை உரக்கக் கூவி, தன் வாழ்வைத் தமிழரின் விடுதலை வேள்வியில் ஆகுதியாக்கினார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தியாகங்களின் சிகரங்களைத் தொட்ட சந்தர்ப்பங்களில், தியாகச் செம்மல் லெப்.கேணல் திலீபனின் தியாகம் மிக முக்கியமானதாகும். "தியாகம் என்றால் திலீபன், திலீபன் என்றால் தியாகம்" என்ற போராட்ட வரலாறு மகத்தானது. இன விடுதலை உரிமை வேண்டிய இலட்சியத்தின் அணையாத நெருப்பானது. இந்தியாவுக்கு எதிராக அகிம்சை ரீதியில் போராடி வீரச்சாவடைந்த தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் அவர்களின் 36ஆவது ஆண்டு நினைவு நாள் தமிழர் தாயக மண்ணிலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்று வருகிறது.

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமைக்கு எதிராக முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை "செல்வா" தலைமையில் முயன்று முடியாத நிலையில் எமது தமிழ் இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றத்தானே வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம், பல சந்தர்ப்பங்களில் ஆயுத ரீதியிலான வன்முறை வழியைத் தவிர்த்து அகிம்சை வழியைக் கடைப்பிடிக்க முனைந்த போதெல்லாம், எதிர்மறையான விளைவுகளும் ஏமாற்றங்களுமே பரிசாகக் கிடைத்தன. நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் நம் எதிரி அகிம்சையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன். அவனுக்கு அது புரியாதது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான், ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தன் பலமாக எண்ணும்போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும். நீண்ட கசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன.

தனியான மொழி கலாச்சார பண்பாடுகளைக் கொண்ட தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றை அழிப்பதனூடாக அவர்களின் தனித்துவம் அடையாளத்தை அழித்து நாடு முழுவதையும் சிங்கள தேசமாக மாற்றிட மரபுரிமைகளை அழித்தும் அவற்றை திரிபுபடுத்தியும் பௌத்த மயமாக்கல் என்னும் வேலைத்திட்டம் மும்மரமாக நிகழ்ந்திட, தமிழர் தாயகத்தில் பல அக்கிரமங்களும் அடாவடிகளும் அரங்கேறிட, எதிர்த்து நின்ற தமிழ்த் தலைமைகள், மக்களும் சமூக ஆர்வலர்களும் சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். எத்தனை இனக்கலவரங்களில் படுகொலைகள். தலைகள் வெட்டப்பட்டு தார்ப் பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக்கும். எத்தனை பெண்கள் வார்த்தைகளினால் சொல்லமுடியாத பாலியல் வன்முறைகளை எதிர்கொண்டிருப்பார்கள். மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் எமது கைகளிலே ஆயுதங்களை ஏந்த வைத்தார்கள். சிங்களப் பேரினவாதம் தான் தேச விடுதலைக்காகத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங்கைகள் அணி திரண்டு நிற்பதற்குக் காரணம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தமிழீழமக்கள்மத்தியில்மாபெரும்செல்வாக்கு இருப்பதற்கு சிங்களப் பேரினவாதம்தான் காரணம். விடுதலைப்புலிகள் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களிலிருந்து தம் உயிரையே அர்ப்பணித்து மக்களைக் காவல் தெய்வங்களாக காத்தார்கள். எந்தச் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலிகளினால் தீர்க்கப்படும் என்ற உயர்ந்த நம்பிக்கையினையும், தன்நிறைவுப் பொருளாரதாரம். நீதி மற்றும் நிர்வாக அலகுகள் மூலமும் "மக்கள் என்றால் புலிகள் - புலிகள் என்றால் மக்கள்" எனப் போற்றப்பட்டார்கள். தமிழீழ தேசத்தின் உருவாக்கத்திற்கு உறுதுணையான உட்கட்டுமான திட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கினார். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழ மாணவர் அமைப்பு, சுதந்திரப்பறவைகள் ரடோ (RADO) போன்ற அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த அமைப்புக்கள் ஊடாக பிரதேச பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தார். சுதந்திரப் பறவைகள் மூலம் பெருமளவு மகளிர் விடுதலைப் போராட்டத்தினுள் உள்வாங்கப்பட்டனர். மாணவர்கள் தமிழீழ மாணவர் அமைப்பின் மூலம் விடுதலைப் போராட்டத்துக்கு தமது பங்களிப்பை வழங்கத் தலைப்பட்டார்கள்.

அகிம்சைக்கே அடையாளமெனக் கருதப்பட்ட பாரத தேசம், தமிழர்களின் அகிம்சைப் போராட்டத்தைக் காலடியில் போட்டு மிதித்தது. தியாகச் செம்மல் திலீபனால் அன்று ஆரம்பிக்கப்பட்ட அகிம்சைப் போராட்டம் பல ஆழமான விடயங்களை இன்றைய காலகட்டத்தில் தமிழினத்துக்கு நினைவுறுத்தி நிற்கிறது. வீரமும், விவேகமும், வழிநடத்தலும், தியாக ஆன்மங்களின் நீண்ட பயணமது. ஒப்பற்ற வீரனின் கனவுகளைச் சுமந்து நிற்கின்ற ஒவ்வொரு தமிழர்களும் திலீபனை நினைவு கூர்ந்து நிற்பது ஒவ்வொருவரினதும் வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ் இன விடுதலைக்காக, சிங்கள அரசின் அடக்குமுறைகளில் இருந்து தமிழினத்தைக் காக்கும் நோக்குடனும் இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தி ஒரு துளி நீர் கூட அருந்தாமல் உணவு முழுவதுமாக ஒறுத்த திலீபனின் உடல் வாடி வதங்கி, மெலிந்து சுருண்டு, நிலை குலைந்து நினைவிழந்துபோய் அந்த உன்னத ஆத்மா, அவனது உடலைவிட்டுப் பிரிந்து தியாகச் சாவடைந்தார். அன்று இந்தியா மௌனமாய் இருந்து, ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கே துரோகம் செய்ததன் மூலம் 'காந்தியம்' என்ற திரைக்குப் பின்னாலிருந்த தனது உண்மையான கோரமுகத்தை வெளிக்காட்டியது. காந்திதேசத்தின் மீது தமிழர்களின் நம்பிக்கையின் பற்றுதல் தளர்ந்த நாள்கள் அன்று வெளிக்காட்டத் தொடங்கிய காந்திதேசத்தின் துரோக நாடகம் இன்றுவரை தமிழரை இன அழிப்பு செய்து வருவது தொடர்கதையாகத் தொடர்கின்றது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இனக்கலவரத்தின் கோரப்பிடியில் சிக்கி தமிழ் இனம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டிருந்த காலம் அது. சிங்களத்தின் இனவாதப் படைகளின் அட்டூழிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட போராளிகளில் சிறையில் குட்டிமணி தங்கத்துரை போன்றவர்கள் சிங்களக் கொடும் வெறியர்களால் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள், சிங்களக் காடையர்களால் இலங்கை முழுவதும் பெரிய இனக் கலவரத்தை திட்டமிட்டு ஏற்படுத்தி தமிழர்களை கொன்று குவித்ததும், தமிழ்ப் பெண்கள் வகை தொகையின்றி பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய சம்பவங்கள் விஸ்வரூபம் எடுத்து தாண்டவம் ஆடியது.

ஊரெழுவில் மூன்று சகோதரர்களுடன் பிறந்த அந்த உரிமைத் தாகம் பிறந்த ஒன்பது மாதத்தில் தாய் இழந்து பின்னர் தந்தையையும் இழந்து சகோதரர்களால் வளர்க்கப்பட்டார். யாழ் இந்துக்கல்லூரியின் விழுதுகளில் ஒருவனாய் 1982 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தியெய்தி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவானார். தனது பள்ளிப் பருவத்தில் சிறந்த சதுரங்க வீரனாக விளங்கிய திலீபன் மாவட்டத்தில் சிறந்த சதுரங்க வீரனாக 4 தடவைகள் தெரிவு செய்யப்பட்டார். அத்தோடு விளையாட்டுக்குழுவின் தலைவனாகவும் விளங்கினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவனாகக் கல்வி கற்றுக்கொண்டிருக்கையில் விடுதலைத் தாகம்கொண்ட, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரனைத் தலைவராக ஏற்றுத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் திலீபன் என்ற பெயரில் தன்னையும் இணைத்துக் கொண்டார். விடுதலைப்புலிகள் இயக்கத்தால் இவருக்கு திலீபன் எனும் பெயர் வழங்கப்பட்டது. இடைக்காலப் பகுதியில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதல்களில் பங்கு கொண்டர். 1987 இல் மே மாதம் தாக்குதல் ஒன்றில் வயிற்றில் படுகாயமடைந்து ஒரு சில மாதங்கள் வரையில் சிகிச்சை பெற்று மீண்டும் மிடுக்குடன் செயற்பட ஆரம்பித்தார்.

கருத்தியல் ரீதியாக ஆழமான புரிதல் கொண்ட ஒரு போராளியாக யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். தன் பேச்சுக்களால் மக்களின் மனங்களைக் கவர்ந்த போராளி "யாழ்.கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ, அன்றுதான் சுதந்திர தமிழீழத்தின் ஆரம்பம்". இந்த வெற்றி நான் என் உயிருக்கு மேலாக நேசிக்கும் என் மக்களுக்கு கிடைக்கட்டும். மக்கள் அனைவரும் முழுமையாகப் போராடத் தயாரானால் நிச்சயமாகத் தமிழீழத்தை அமைக்க முடியும். நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் மக்கள் புரட்சிக்குத் தயாராகவேண்டும் என அன்று அவர் பேசிய பேச்சுக்கள் இன்றும் நிலத்திலும் புலத்திலும் தமிழகத்திலும் இருக்கின்ற தமிழர்களைத் தமிழ் இன விடுதலையின் ஒன்றிணைய தமிழ் தேசிய மக்கள் புரட்சிக்கு வித்திட்டுள்ளது.

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் 04.08.1987 அன்று சுதுமலையில் நடைபெற்ற கூட்டத்தில் "எமது போராட்ட வடிவம் மாறலாம். ஆனால் எங்கள் குறிக்கோள் என்றுமே மாறாது" என்று சூளுரைத்திருந்தார். போராட்டத்தின் மற்றொரு வடிவமாக அகிம்சைப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் தேர்ந்தெடுத்திருந்தனர். யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டுவந்த திலீபன் அவர்கள் இந்தியாவை நோக்கி ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தன் உயிரை எம் தேசத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3). அவசரக்கால சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் முற்றாக கைவிட வேண்டும். என்ற இந்த ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை தண்ணீரும் அருந்தப்போவதில்லை' இந்திய அரசிடம் நீதி கேட்டு சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அறிவித்து ஈடுபட்டார்.

தொடரும்...

# தமிழ் இன அழிப்பின் சாட்சியங்களைச் சொல்லத்துடிக்கும் மனிதப் புதைகுழிகள்

கடந்தவாரக் கட்டுரையின் 13ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதனைத் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இதனை மூடி விவகாரத்தை முடக்கிவிட தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் முற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. குறித்த மனித எலும்புக்கூட்டுத் தொகுதி தொல்லியலுடன் தொடர்புபட்டதா அல்லது அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தின் புதைகுழி எனத் தெரியவரவில்லை. முன்னதாக யாழ். கோட்டையினை அண்மித்த துரையப்பா விளையாட்டரங்கிலும் பாரிய மனித புதைகுழி கண்டறியப்பட்டிருந்தபோதும் கால ஓட்டத்தில் அதுவும் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1999 ஏப்ரல் மாதம், யாழ்ப்பாணத்திலுள்ள துரையப்பா விளையாட்டரங்கில் ஆடை மாற்றும் அறைகளைக் கட்டுவதற்கான அத்திவாரம் அமைக்கும் பணிகளை மேற்கொண்டிருந்த கட்டுமானப் பணியாட்கள், மனித சிதிலங்களைக் கண்டெடுத்தனர். இந்த இடம் தோண்டப்பட்டதில், இரு சிறுவர்களது எலும்புக்கூடுகள் உட்பட மொத்தம் 25 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. ஒரு எலும்புக்கூட்டின் கைகள் கட்டப்பட்டிருந்தன. ஒரு குழந்தையின் எலும்புக்கூட்டில் செம்பு வளையல் காணப்பட்டது. இந்தப் புதை குழியின் ஆதாரங்கள் சந்தேகத்திற்கு உரியவையாக உள்ளது.

## செம்மணி மனிதப் புதைகுழி

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக காலத்தில், செம்மணி மனிதப் புதைகுழி என்கிற அரசியல் சர்வதேச கவனத்தைப் பெற்றிருந்தது. உள்ளூர், சர்வதேச ஊடகங்களும் சுவாரஸ்யமான தகவல்களை இங்கிருந்து திரட்டி வழங்கியிருந்தன. யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்விகற்ற மாணவி கிரிஷாந்தி குமாரசுவாமி, விபத்தில் உயிரிழந்த சக மாணவியின் மரண வீட்டிற்கு சென்று விட்டுத் திரும்பி வந்த போது செம்மணி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டார்.

மாணவி கிரிஷாந்தி 1996 ஆம் ஆண்டு புரட்டாதி 7 ஆம் திகதி பாலியல் வன்கொடுமைக்கு, இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார். செம்மணி இராணுவ முகாமில் கிரிஷாந்தி தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியை அறிந்த அவரது தாயார், சகோதரன், அயலவர் உட்பட மூவர் இராணுவ முகாம் நோக்கிச் சென்றனர். அதன் பின்னர் கிரு ஷாந்தியோ அல்லது அவரைத் தேடிச்சென்ற மூவரோ வீடு திரும்பவில்லை.

கிரிஷாந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தினை மறைப்பதற்காகத் தேடிச்சென்ற தாயார், சகோதரன் உட்பட மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர். கிரிஷாந்தி காணாமற்போய் 45 நாட்களின் பின்னர், செம்மணி இராணுவ முகாமிலிருந்து, சில மீற்றர்கள் தூரத்தில் கிரிஷாந்தி உட்பட நால்வரது சடலங்களும் தோண்டி எடுக்கப்பட்டன. தோண்டி எடுக்கப்பட்ட சடலங்களைக் கொழும்பிற்குப் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்குமாறு சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் மற்றும் கனிஷ்ட சட்டத்தரணி மா.இளஞ்செழியன் ஆகியோர் அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்து, சடலம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கிரிஷாந்தி படுகொலையுடன் தொடர்புடைய ஐந்து இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு, யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற நிலையில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் சார்பில் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், கனிஸ்ட சட்டத்தரணி. இளஞ்செழியன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். இந்த வழக்கு Trial at Bar முன்னிலையில் நீதிபதிகள் நிமால் திசாநாயக்க, அன்ரூ சோமவன்ச, காமினி அபயரட்ண ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நீதிபதிகள் குழு ஐந்து இராணுவத்தினருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. கிரிஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு முன்னர் நீங்கள் ஏதாவது கூறப்போகின்றீர்களா என வினவியதற்கு, அவர்கள் வழங்கிய பதில் உலகையே ஒருமுறை திரும்பிப் பார்க்க வைத்தது.

சுமார் 400 தொடக்கம் 600 வரையான இளைஞர், யுவதிகள் கொலை செய்யப்பட்டு செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக கிரிஷாந்தி வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் வாக்குமூலம் வழங்கினர். இந்தப் படுகொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் கண்டி போகம்பரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கிரிஷாந்தி கொலை வழக்கில் பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மா.இளஞ்செழியன் மன்னார் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கிரிஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் வழங்கிய வாக்குமூலத்தினையடுத்து, செம்மணி புதைகுழியினை அகழ்வதற்கு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், யாழ் நீதவான் நீதிமன்ற விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

செம்மணி புதைகுழி 1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 2000 ஆம் ஆண்டு பங்குனி 27 ஆம் திகதி வரையான ஒன்பது மாதங்கள் நடைபெற்றன. கிரிஷாந்தி படுகொலையின் மரண தண்டனைக் கைதிகளை விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து செம்மணி புதைகுழியைத் தோண்டுவதற்கு நீதிபதி மா.இளஞ்செழியன் நடவடிக்கை எடுத்திருந்தார். செம்மணியில் 25 புதைகுழிகள் தோண்டப்பட்டு 16 சடலங்கள் மீட்கப்பட்டன, எனினும், அவர்கள் அடையாளப்படுத்திய 10 புதைகுழிகளில் சடலங்கள் இருக்கவில்லை. செம்மணி, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய இராணுவ முகாம்களில் கொலை செய்யப்பட்டவர்களே செம்மணியில் புதைக் கப்பட்டதாகக் கைது செய்யப்பட்டவர்கள் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

மன்னார் மாவட்ட நீதிபதி மா.இளஞ்செழியன் செம்மணி புதைகுழி அகழ்விற்காக யாழ்.நீதவான் நீதிமன்ற விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டு, செம்மணி புதைகுழியைத் தோண்டியதன் பின்னர் நியமனம் நிறைவுபெறும் வகையில் அமர்த்தப்பட்டிருந்தார். இவ்வாறு மீட்கப்பட்ட 16 பேரினது சடலங்களும் அடித்துக் கொலை செய்யப்பட்டவை என மரண விசாரணை தீர்ப்பு வழங்கி, யாழ்.நிரந்தர நீதிபதியிடம் வழக்கினை பாரப்படுத்திவிட்டு செம்மணி புதைகுழியின் விசேட நீதிபதி மா.இளஞ்செழின் தனது பணியினை நிறைவு செய்தார். ஆறு மாதங்களின் பின்னர் செம்மணி புதைகுழி வழக்கின் பிரதிவாதிகள் தமக்குச் சட்டத்தரணிகள் இல்லை எனத் தெரிவித்து, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து, வழக்கு யாழ். நீதவான் நீதிமன்றத்திலிருந்து கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில், ஒரு சில மாதங்களின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் ஆறு பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

செம்மணி புதைகுழி சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுப் பிணை வழங்கப்பட்டு 23 வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை நீதி கிடைக்கவில்லை. அன்று உலகையே உலுக்கிய செம்மணி புதைகுழி தொடர்பில் அனைவரும் இன்று மறந்தவர்களாகவே உள்ளனர். இந்த வழக்கின் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் கடமையைப் பாராட்டி ஐக்கிய அமெரிக்கா 2001 ஆம் விசேட விருந்தினராக அழைத்து அவரை கௌரவித்து, பிரஜாவுரிமை வழங்கியதுடன், ஒருநாள் மாநகர மேயராகவும் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

செம்மணி புதைகுழியுடன் தொடர்புடைய ஐந்து இராணுவத்தினரையும் பொலிஸ் அதிகாரி ஒருவரையும் கைது செய்து, விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட விசேட நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார். 600க்கும் மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன என வெளியான தகவலோடு செம்மணி மனிதப் புதைகுழி பற்றிய கதைகள் மறக்கச் செய்யப்பட்டன. தொடர்ந்து நாட்டில் நிலவிய அரசியல் குழறுபடிகள் செம்மணியை நிரந்தரமாகவே மூடிவிட்டது. செம்மணி மனிதப் புதைகுழி, நம் நினைவுக்கு இலகுவில் கொண்டு வருவதற்காக உதாரணப்படுத்தப்பட்ட ஒன்று. ஆனால், இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் மனிதப் புதைகுழிகள் இருப்பதை, அனைவரும் நினைவுபடுத்துவர். தமிழ் இனப் படுகொலைகளின் ஒரு எச்சம்தான் மனிதப் புதைகுழி. அந்தப் புதைகுழி தொடர்ந்து காலத்திற்குக் காலம் தன் குரலை எழுப்பி வருகிறது. ஆனாலும், வழமையான காலங்கடத்தி மறக்கச்செய்யும் பொறிமுறைகளால் மறக்கச்செய்யப்பட்டன.

## மிருசுவில் மனிதப் புதைகுழி

2000ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்திலுள்ள மிருசுவிலில் இடம்பெற்ற சம்பவத்தில் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஞானச்சந்திரன், சாந்தன், ஞானபாலன் ரவிவீரன், செல்லமுத்து தெய்வகுலசிங்கம், வில்வராஜா பிரதீபன், சின்னையா வில்வராஜா, நடேசு ஜெயச்சந்திரன் மற்றும் வில்வராஜா பிரசாத் (வயது-5) ஆகிய எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த எண்மரும் இராணுவத்தினர் 6 பேரால் படுகொலை செய்யப்பட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டது. இதில் படுகொலை செய்யப்பட்ட பிரசாத்திற்கு அப்போது ஐந்து வயது மட்டுமே ஆகியிருந்தது. தமிழர்கள் எட்டுப் பேர் காணாமற்போயிருந்தனர். மறுநாள் இவர்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரின் பிடியில் இருந்து, காயங்களுடன் தப்பிய ஒருவர், இந்த தகவலை வெளிப்படுத்தியதை அடுத்து, நடத்தப்பட்ட தேடுதலில் எட்டு பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன. இதையடுத்து, 16 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஏற்படுத்தப்பட்டனர். சாவகச்சேரி நீதிவானாக அப்போது, தற்போதைய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கடமையாற்றினார். 15 இராணுவத்தினரையும் விளக்கமறியல் வைத்த நீதிவான் அன்னலிங்கம் பிரேமசங்கர், சம்பவ இடத்துக்குச்சென்று விசாரணைகளை முன்னெடுத்தார். இராணுவப் பொலிஸார் மற்றும் பொலிஸார் உள்ளிட்டோரின் முன்னிலையில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடம் கண்டறியப்பட்டு அவை மீட்கப்பட்டன.

15 இராணுவத்தினரில் 10 பேரை விடுவித்த சட்ட மா அதிபர் திணைக்களம், 5 இராணுவத்தினருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்தது. 19 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு 2015ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் லலித்ஜெயசூரிய, பிரீதி பத்மன் சூரசேன ஆகியோரால் வழங்கப்பட்டது. இதன்படி, ஸ்ராப் சார்ஜன்ட் சுனில் இரத்நாயக்க என்ற இராணுவ இளநிலை அதிகாரி குற்றவாளியாகக் காணப்பட்டு, அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த ஏனைய நான்கு படையினருக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட சான்றுகளில் சந்தேகங்கள் இருப்பதாகக் கூறி, அவர்கள் நால்வரையும் நீதிபதிகள் விடுதலை செய்துள்ளனர்.

மிருசுவில் படுகொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவிற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. சுனில்ரத்நாயக்கவிற்குஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஸவினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நான்கு மனுக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. உச்ச நீதிமன்ற நீதிபதிகளான L.T.B.தெஹிதெனிய மற்றும் யசந்த கோதாகொட ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் இரண்டு மனுக்கள் உறவினர்கள் சார்பிலும், ஏனைய இரண்டும் பொது நல மனுக்களாகவும் தாக்கல் செய்யப்பட்டன.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்திற்கமையவே இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த மனுவிற்கமைய, இவ்வாறு பொது மன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தை நிறுத்துமாறு, அதற்கான இடைக்கால தடையுத்தரவை மனுதாரர்கள் கோருகின்றனர். இந்த மன்னிப்பைப் பெற இராணுவ வீரர் சுனில் ரத்நாயக்கவிற்கு தகைமையில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர். அரசியலமைப்பின்படி எந்தவொருவருக்கும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முடியும். பெண்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியவர்களுக்கு இந்நாட்டின் ஜனாதிபதிகள் கடந்த காலத்தில் மன்னிப்பு வழங்கினர். எனினும், போரில் தெற்கிலுள்ள மக்களைப் பாதுகாப்பதற்காகப் போராடியதற்குப் பிரதிபலனாகவே சுனில் ரத்நாயக்கவிற்கு இந்த மன்னிப்பு கிடைத்துள்ளது எனப் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி பிரேமநாத் சீ.தொலவத்த குறிப்பிட்டார்.

இலங்கையில் எட்டு தமிழர்களைப் படுகொலை செய்தமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரி சுனில் ரத்னாயக்க விடுதலை செய்யப்பட்ட சம்பவம் தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கோட்டாபய இராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக பாரிய கோபத்தையும் உருவாக்கியிருந்தது. பரந்துபட்ட தமிழ் வெகுஜனங்களின் கோபங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் கொழும்பு ஆட்சியைப் பாதுகாக்கவும் தமிழ் தேசியவாத கட்சிகளாக தம்மைக் காட்டிக்கொள்ளும் தலைவர்கள், எந்த சிரமமுமின்றி வெற்றுப் பத்திரிகை அறிக்கைகளைத் தாராளமாக வெளியிட்டிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடரும்...

# விளையாட்டுச் செய்திகள்

## பளு தூக்கல் போட்டியில் சாதனை படைத்த மாணவிகள்




கடந்த சனிக்கிழமை (4.10.2023) அன்று பொலன்னறுவையில் நடைபெற்ற Youth, Junior, Senior Weightlifting Championship இல் வ/பெரிய கோமரசங்குள மகா வித்தியாலய மாணவிகள் மற்றும் வ/பளுதூக்கல் கழக மாணவிகள் பதக்கங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

க.அபிசாளினி மற்றும் பா.மதுசாளினி 1ம் இடத்தையும், பா.கிசாளினி மற்றும் பா.செரோண்யா 2ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். இம் மாணவிகளின் பெற்றோருக்கும், பயிற்சி ஆசிரியருக்கும், சாதனை படைத்த மாணவிகளுக்கும் தினப்புயல் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.




## இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளர் மொஹான் டி சில்வா இராஜினாமா



இலங்கை கிரிக்கெட் நிறுவன (SLC) செயலாளர் மொஹான் டி சில்வா தனது பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை அணியின் தொடர்ச்சியான போட்டித் தோல்விகளைக் கருத்தில் கொண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் அதிகாரிகள் மீது பல தரப்பில் இருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளரான மொஹான் டி சில்வா தனது பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## உலகக் கிண்ணத்துக்கு நேபாளம், ஓமன் அணிகள் தகுதி

அடுத்த ஆண்டு ஆண்களுக்கான டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு நேபாளம் மற்றும் ஓமன் அணிகள் வெள்ளிக்கிழமை தகுதி பெற்றன. ஆசிய தகுதிச்சுற்று போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியதன் அடிப்படையில் அவை இந்த முன்னேற்றத்தை சந்தித்துள்ளன.

முன்னதாக, அதன் அரையிறுதிகளில், நேபாளம் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தையும், ஓமன் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பஹ்ரைனையும் வீழ்த்தின.

டி20 உலகக்கிண்ண போட்டிக்கு நேபாளம் தகுதி பெற்றது இது 2 ஆவது முறை. ஓமனுக்கு இது 3 ஆவது முறை. நேபாளம் 2014 எடிஷனிலும், ஓமன் 2016, 2021 எடிஷன்களிலும் அங்கம் வகித்து, தொடக்க சுற்றிலேயே வெளியேறின. டி20 உலகக் கிண்ண போட்டியின் 9 ஆவது எடிஷன், அடுத்த ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.



20 அணிகள் பங்கேற்கவுள்ள இந்தப் போட்டிக்கு இத்துடன் 18 அணிகள் தேர்வாகியுள்ளன. எஞ்சிய இரு அணிகள், ஆப்பிரிக்க குவாலிஃபயர் மூலம் நவம்பரில் தேர்வாக உள்ளன.

இதுவரை தகுதி பெற்ற அணிகள் : மேற்கிந்தியத் தீவுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து (நடப்பு செம்பியன்), இந்தியா, நெதர்லாந்து, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா, இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், அயர்லாந்து, ஸ்காட்லாந்து, பப்புவா நியூகினி, கனடா, நேபாளம், ஓமன்.

## குறிவைக்கப்படும் பாலஸ்தீன கால்பந்து வீரர்கள்



வரவிருக்கும் உலகக் கோப்பை தகுதிச் சுற்றுக்கு பாலஸ்தீன கால்பந்து அணி தயாராகும் நிலையில், கால்பந்து வீரர்களை இஸ்ரேலிய ராணுவம் குறிவைத்து வருவதாக கூறப்படுகிறது.

இஸ்ரேல் வான் தாக்குதலுக்கு டிசம்பர் 2008ல் 19 வயதேயான பாலஸ்தீன கால்பந்து நட்சத்திரம் Hazem Alrekhawi தமது நண்பர்கள் 9 பேர்களுடன் இஸ்ரேல் வான் தாக்குதலுக்கு இலக்கானார்.

காஸா பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இந்த தாக்குதலில், Hazem Alrekhawi மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். ஆனால் காயங்கள் காரணமாக கால்பந்து விளையாட முடியாமல் போனது.

2011ல் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்கு கரையில் குடியேறிய Hazem Alrekhawi, இந்த கோடையில் சொந்த ஊருக்கு திரும்பவேண்டும் என திட்டமிட்டிருந்தார்.

ஆனால் தற்போது Hazem Alrekhawi என்ன ஆனார் என்ற தகவல் இல்லை.

1928ல் பாலஸ்தீன கால்பந்து நிர்வாகம் தொடங்கப்பட்டது. அடுத்த ஆண்டு ஃபிஃபா உறுப்பினராக இணைந்து கொண்டது. ஆனால் அதன் பின்னர் யூதர்களின் கட்டுப்பாட்டுக்கு சென்ற பாலஸ்தீன கால்பந்து, 1948ல் இஸ்ரேல் கால்பந்து கழகம் என உருமாற்றம் பெற்றது.

அதன் பின்னர் பாலஸ்தீன மக்கள் கால்பந்து விளையாடுவதை கைவிட்டனர். ஆனால் 1998ல் மீண்டும் பாலஸ்தீன கால்பந்து கழகம் உருவாக்கப்பட்டு, பிஃபா உறுப்பினராகவும் மாறியது.

அதன் பின்னர் இஸ்ரேல் முன்னெடுத்த நக்பா என்ற இன அழிப்பில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டதுடன், இஸ்ரேல் நாட்டை உருவாக்கும் பொருட்டு, சுமார் 750,000 பாலஸ்தீன மக்கள் வேறு பகுதிகளுக்கு துரத்தப்பட்டனர்.

அந்த நெருக்கடிகளில் இருந்தும் பாலஸ்தீன கால்பந்து தப்பியது. ஆனால் தற்போது 2026 கால்பந்து உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்றுக்கு தயாராக வேண்டும் என்பதுடன், 2024 ஜனவரியில் ஆசிய கிண்ணம் தொடரில் பங்கேற்க வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது பாலஸ்தீன அணி.

ஆனால் பெரும்பாலான வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றே தகவல் வெளியாகியுள்ளது.

# உலக வலம்

## காஸாவில் இருந்து 7,000 பேரை மீட்க முடிவு



இஸ்ரேலால் முற்றுகையிடப்பட்டு, கடுமையான தாக்குதலுக்குள்ளாகியுள்ள காஸா பகுதியிலிருந்து 7,000 வெளிநாட்டினரை மீட்க ஆயத்தமாகி வருவதாக எகிப்து அறிவித்துள்ளது. அந்தப் பகுதியிலிருந்து சுமார் 300க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் மற்றும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் ரா:பா எல்லை வழியாக தங்கள் நாட்டுக்குள் முதல் முறையாக அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பை எகிப்து வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காஸாவிலிருந்து சுமார் 7,000 வெளிநாட்டினரை ரா:பா எல்லை வழியாக வரவேற்க ஆயத்தமாகி வருகிறோம். 60க்கும் மேற்பட்ட வெளிநாடுகளின் கடவுச் சீட்டுகளை (பாஸ்போர்ட்) வைத்திருப்பவர்களுக்கும், இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களுக்கும் மட்டும் எகிப்துக்குள் வர அனுமதி அளிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே காஸாவிலிருந்து 361 வெளிநாட்டினர் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளனர். 3 வார காலமாக காஸாவில் நடைபெற்று வரும் மிகக் கடுமையான போரிலிருந்து தப்பி வந்த அவர்களில் ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த 31 பேர், 5 பிரான்ஸ் நாட்டவர்கள், 4 இத்தாலியர்கள், ஏராளமான ஜெர்மானியர்கள் இடம் பெற்றிருந்ததாக அந்தந்த நாடுகளின் அரசுகள் தெரிவித்துள்ளன.

இந்த 400 பேரும் 44 நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும், காஸாவில் செயல்பட்டு வரும் ஐ.நா பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு தொண்டு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆக்கிரமிப்பு காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் கடந்த 2005ஆம் ஆண்டு வெளியேறியது. அதன் பிறகு அந்தப் பகுதியின் ஆட்சியைக் கைப்பற்றிய ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. இந்தப் பதற்றம் பலமுறை பெரிய அளவிலான போராக உருவெடுத்துள்ளது. இந்தச் சூழலில், கடந்த மாதம் 7 ஆம் திகதி காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை சரமாரியாக வீசிய ஹமாஸ் குழுவினர், அந்த நாட்டுக்குள் அதிரடியாக ஊடுருவி 1,400க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்தனர். இதில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஆவர்.

ஹமாஸ் நடத்திய இந்த கொடூரத் தாக்குதலுக்குப் பதிலடியாக அந்தப் பகுதியை முற்றுகையிட்ட இஸ்ரேல் ராணுவம், கடந்த 27 நாள்களாக காஸா முழுவதும் தீவிர வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. அத்துடன், காஸாவுக்குள் உணவு, குடிநீர், எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள் செல்வதற்குத் தடை விதித்து, அந்தப் பகுதியை இஸ்ரேல் ராணுவம் முழுமையாக முற்றுகையிட்டது. இது, ஹமாஸ் அமைப்பினரின் குற்றத்துக்காக காஸா பகுதியில் இருக்கும் அனைத்து மக்களுக்கும் அளிக்கப்படும் கூட்டு தண்டனை என்று விமர்சிக்கப்பட்டது.

இஸ்ரேலின் தாக்குதல் மற்றும் முற்றுகையால் காஸாவில் வசிக்கும் பாலஸ்தீனர்கள் மட்டுமன்றி, அங்கு நீண்ட காலமாகத் தங்கி சேவையாற்றி வரும் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த வெளிநாட்டினரும், இரட்டைக் குடியுரிமை பெற்று அங்கு வசித்து வருபவர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இஸ்ரேலின் கடுமையான முற்றுகைக்கு உள்ளாகியிருந்த காஸாவுக்குள் சர்வதேச நாடுகளின் தீவிர முயற்சிகளுக்குப் பிறகு நிவாரணப் பொருள்கள் செல்ல அவ்வப்போது அனுமதிக்கப்பட்டு வந்தது. எனினும், அங்கிருந்து யாரும் வெளியேற அனுமதிக்கப்படாமல் இருந்து வந்தது. காஸாவில் இருந்து வரும் அகதிகளை ஏற்க எகிப்தும் தயக்கம் காட்டி வந்தது.

இந்த நிலையில், காஸாவில் சிக்கியுள்ள வெளிநாட்டினரை மீட்பதற்காக அவர்களது நாடுகள் மேற்கொண்ட தூதரக முயற்சியின் பலனாக, அவர்களை தங்கள் நாட்டுக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அனுமதிக்க எகிப்து ஒப்புக்கொண்டது. அதன்படி ரா:பா எல்லையைக் கடந்து முதல் முறையாக சுமார் 400 பேர் வந்துள்ள நிலையில், மேலும் 7,000 வெளிநாட்டினரை காஸாவிலிருந்து வரவேற்கத் தயாராகி வருவதாக எகிப்து தற்போது அறிவித்துள்ளது.

## கனடாவில் காசோலைகள் களவாடப்படுவதாக எச்சரிக்கை




கனடாவில் காசோலைகள் களவாடப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் சிறு வர்த்தகம் ஒன்றில் ஈடுபட்டுள்ள நபர் ஒருவர் தபால் மூலம் அனுப்பி வைத்த காசோலை களவாடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். 10,000 டாலர் பெறுமதியான காசோலை இவ்வாறு களவாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னுடைய வருமான முகவர் நிறுவனத்திற்கே அனுப்பி வைக்கப்பட்ட காசோலையே இவ்வாறு களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றார். களவாடப்பட்ட காசோலை வேறும் ஓர் கணக்கில் வைப்பிலிடப்பட்டு பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறு பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு மோசடி செய்வதற்காகவே திறக்கப்பட்ட கணக்கு என அவர் குறிப்பிட்டுள்ளார். பணத்தை பெற்றுக்கொண்டவுடன் குறித்த கணக்கு முடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான மோசடிகள் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என அவர் கூறியுள்ளார். கனடிய வருமான முகவர் நிறுவனத்திற்கு தாம் அனுப்பிய காசோலையே இவ்வாறு இடைநடுவில் களவாடப்பட்டு வேறுமோர் கணக்கில் வைப்பிலிட்டு பணமாக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போலியான பெயரொன்றைக் கொண்டு காசோலை பணமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் அண்மைக்காலமாக கனடாவில் இடம்பெற்றுவரும் இந்த மோசடிக்கு காசோலை சலவை (cheque washing) என பெயரிடப்பட்டுள்ளது. குற்றவாளிகள் காசோலையை களவாடி தபால் மூலம் அனுப்பப்படும் காசோலையை களவாடி அவற்றின் பெயர்கள் இலக்கங்களை மாற்றி மோசடி செய்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறு காசோலைகள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால் 45 நாட்களுக்குள் முறைப்பாடு செய்யுமாறு வங்கிகள் பொதுமக்களிடம் கோரியுள்ளன.

## தொடரும் பத்திரிக்கையாளர்கள் கொலைகள்

"பிலிப்பைன்ஸ் நாட்டின் பத்திரிக்கையாளராகவும், வானொலி ஒலிபரப்பாளராகவும் இருந்தவர் 57 வயதான ஜுவன் ஜுமலோன். டிஜேவாக (DJ) ஜுவன், "டிஜே ஜானி வாக்கர்" எனும் புனைப்பெயரில் புகழ் பெற்றிருந்தார். ஜுவன், மிசாமிஸ் ஆக்ஸிடென்டல் (Misamis Occidental) பகுதியில் உள்ள கோல்ட் எஃப் எம் 94.7 (Gold FM 94.7) எனும் வானொலி நிலையத்தில் பணியாற்றி வந்தார்.



காலை சுமார் 05:30 மணியளவில் வானொலி நிலையத்தில் உள்ள ஸ்டூடியோவில் நிகழ்ச்சியை ஒலிபரப்பி, டிஜேவாக நேயர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து கொண்டிருந்தார். அப்போது அந்த நிலையத்திற்கு இருவர் அவரை தேடி வந்தனர். இரும்பு கதவுகளை தள்ளி விட்டு கொண்டு உள்ளே நுழைந்த அவர்கள் ஜுவன் இருந்த ஒலிபரப்பு அறைக்குள் பலவந்தமாக நுழைந்தனர். அவர்களில் ஒருவன் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து ஜுவனை ஒருமுறை சுட்டான். மற்றொருவன் வேறு யாரும் வருகின்றனரா என பார்த்து கொண்டிருந்தான். அங்கிருந்து புறப்படும்போது அவன், ஜுவன் அணிந்திருந்த நெக்லெஸையும் கழட்டி கொண்டு சென்றான். அங்கிருந்து உடனடியாக ஜுவன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தின் போது அங்கிருந்த கேமிராவில் பதிவான காட்சிகள் இணையத்தில் பரவி வருகிறது. அந்நாட்டு பத்திரிக்கையாளர்கள் சங்கம் இந்த கொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த கொலை சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்டினண்டு மார்கோஸ் ஜுனியர், தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். 1986லிருந்து பிலிப்பைன்ஸ் நாட்டில் நடக்கும் 199-ஆவது பத்திரிக்கையாளர் கொலை இது என்பது குறிப்பிடத்தக்கது."

## டிரம்பின் அஜெண்டா—47



"அமெரிக்காவில் அடுத்த வருடம் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. ஆளும் ஜனநாயக கட்சியை சேர்ந்த அதிபர் ஜோ பைடனுக்கு எதிராக முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் (77) தீவிரமாக களம் இறங்கி உள்ளார். மீண்டும் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டால் அமெரிக்காவின் 47-வது அதிபராக டிரம்ப் பதவி வகிப்பார். அதிபர் தேர்தலில் வென்றால், நாட்டின் வளர்ச்சிக்காக டிரம்ப் எடுக்கப்போகும் முக்கிய நடவடிக்கைகளை "அஜெண்டா 47" (Agenda 47) என அவரது ஆதரவாளர்கள் அழைக்கின்றனர்.

அதன்படி, தனது முந்தைய பதவி காலத்தில் தனது திட்டங்களுக்கு நீதிமன்றங்களும், அதிகாரவர்க்கமும் தடையாய் இருந்ததாக கருதும் டிரம்ப், இம்முறை அவ்வாறு நடைபெறாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக தயார் செய்து வருவதாகவும் அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர். நகரங்களில் வீடில்லாமல் சாலையில் வசிப்பவர்களை அமெரிக்க நகரங்களுக்கு வெளியே குடியமர்த்துவது, தேசபக்தி உள்ள ஆசிரியர்களையே கல்வி நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்துவது, அனைத்து இறக்குமதிகளுக்கும் ஒரு உலகளாவிய அடிப்படை கட்டணத்தை நிர்ணயிப்பது, ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவிற்குள் நுழையும் மெக்சிகோ நாட்டினரை மீண்டும் அந்நாட்டிற்கேதிருப்பி அனுப்பிவைப்பது, சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழைந்த தம்பதியினருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குவதை ரத்து செய்வது, ரஷியாவுடன் போரில் ஈடுபட்டுவரும் உக்ரைனுக்கான பல கோடி மதிப்பிலான உதவிகளை நிறுத்துவது, எரிசக்திக்கான விலையை குறைக்க நடவடிக்கை எடுப்பது மற்றும் அரசுக்கு எதிராக செயல்படும் அரசாங்க அதிகாரிகளை உடனடியாக பணி நீக்கம் செய்வது என பல அதிரடி நடவடிக்கைகள் இந்த "அஜெண்டா 47" மூலம் எடுக்கப்படும் என தெரிய வந்துள்ளது.

அமெரிக்க வளர்ச்சியை மட்டுமே முன்னிறுத்தி குடியரசு கட்சியை சேர்ந்த டிரம்ப் வகுக்கும் இந்த திட்டங்களுக்கு ஜனநாயக கட்சியிலும் ஒரு சிலர் ஆதரவு அளிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. டிரம்ப் மீது அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள கிரிமினல் வழக்குகளில் வரும் தீர்ப்பை பொறுத்தே அவர் அதிபராவது முடிவு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது."




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 05.11.2023 அன்று வெளியிடப்பட்டது.